# அக்னி மலர்கள்

Rs. 25 ■ Agni Malarkal ■ Vol: 10 ■ Issue : 8 ■ April - 2023 ■ Monthly Magazine ■ Tamil



## விவசாயி வழங்கிய வேளாண் பட்ஜெட்..

முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

## கர்நாடக சட்டமன்ற தேர்தல்.. மோடியை முன்னிறுத்தும் பா.ஜ.க.!

காங்கிரஸ்க்கு வாய்ப்பு!

## "சாதியை தேடுகிறார் ஈபிஎஸ் நீதியை தேடுகிறார் ஓபிஎஸ்"

முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் பேட்டி....




METHRAS
CELL O CON
A GREEN REVOLUTION FOR FUTURE BUILDINGS
A GREEN REVOLUTION
FOR FUTURE BUILDINGS
GYPSUM LIME PLASTER
DRY MIX MORTAR BRICK
CELL O CON
DRY MIX MORTAR AAC
DRY MIX PLASTER
Methra are the Leaders in Innovation Construction Technology
CELL O CON Autoclaved Aerated Concrete Blocks and our new range of products are made with internationally proven state of the art technology.
Our Product Range
AAC BLOCKS
REINFORCED AAC PANELS
AERATED LIGHT WEIGHT SOLID WALL SYSTEM
FLY ASH BRICKS
PAVER BLOCKS
DESIGNER PAVER TILES
COVER BLOCKS
HEAT PROOF TILES
DRY MIX MORTAR AND PLASTER
GYPSUM LIME PLASTER
TILE ADHESIVE
WATER PROOFING MEMBRANE
PRE CAST FENCING
HYDROPHOBIC WALL PUTTY
HIGH DENSITY CONCRETE BLOCKS
CONSTRUCTION CHEMICALS
THERMAL PROOF TILES
Managing Director
Dr. P. Venkatesan
M.E (Structures), MBA, Ph.D
METHRA INDUSTRIES INDIA PVT. LTD.
791,Poonamallee High Road, Arumbakkam, Chennai - 600 106
+91 44 2363 8652, +91 94444 44002, +91 94450 11001, +91 +91 94450 11004, +91 94450 11005
methra.sale@gmail.com - methraindustries@rediffmail.com - marketing@methras.in
methrascellocon methrascellocon
CHENNAI - COIMBATORE - BANGALORE
www.methrascellocon.com

# வலைப்பக்கத்தில் கவர்ந்தவை!



வெற்றிகளை சந்தித்தவன்
இதயம்
பூவை போல் மென்மையானது
தோல்வி மட்டுமே சந்தித்தவன்
இதயம்
இரும்பை விட வலிமையானது
-விவேகானந்தர்




நீ பட்ட துன்பத்தை விட
அதில் நீ பெற்ற அனுபவமே
சிறந்தது
-விவேகானந்தர்

வாழ்வது எப்படி
எனப் புலம்பாதே?
காலையில் கூட்டிலிருந்து
புறப்படும் பறவைக்கு
இரை இருக்கும் இடம்
தெரிந்தா பறக்கிறது?

சுமக்கத் தெரிந்து கொண்டால்
சுமைகளும் சுலபம்தான்...
சாதிக்க பழகிவிட்டால்
தடைகளும் சவால்தான்...

எத்தனை நாள் பழகினோம்
என்பது முக்கியமில்லை,
எத்தனை நாள்
உண்மையாக பழகினோம்
என்பதே முக்கியம்...

நாம் நேசிக்கும் ஒருவர் நம்
அன்பை புரிந்து கொள்ளாமல்
நம்மை விட்டு பிரிந்தால்!
முதல் நாள் அழுதிடுங்க..
இரண்டாம் நாள்
கவலைபடுங்க...
மூன்றாம் நாள் சிந்தியுங்கள்...
நம் பாசத்திற்கு சிறிதுகூட
அருகதை இல்லாத
ஒருவருக்காக நாம்
கவலை கொள்வதில்
என்ன இருக்கிறது?

உரிமை இல்லாத உறவும்
உண்மை இல்லாத அன்பும்
நேர்மை இல்லாத நட்பும்
நம்பிக்கை இல்லாத வாழ்க்கையும்
என்றும் நிரந்தரமில்லை...

கீழே விழுந்தவனைக்
கண்டு சிரிக்காதே...
நீ செல்லும்
பாதையிலே
பாசியும் உண்டு...!
பள்ளமும் உண்டு..!!

சிரிப்பவர்கள் எல்லோரும்
கவலையின்றி வாழ்பவர்கள்
இல்லை
கவலையை மறக்க
கற்று கொண்டவர்கள்

வெற்றியை விட
தோல்விக்கு பலம் அதிகம்
வெற்றி
சிரித்து மகிழ வைக்கும்
தோல்வி
சிந்தித்து வாழ வைக்கும்

தோல்விக்கு இரண்டு
காரணம்
ஒன்று
யோசிக்காமல் செய்வது
இரண்டு
யோசித்த பின்னும்
செய்யாமல் இருப்பது
-ஸ்ரீ கிருஷ்ணர்



பெண்கள் இல்லை என்றால்
ஆண்களுக்கு ஆறுதல் சொல்ல
ஆள் இல்லை
பெண்களே இல்லை என்றால்
ஆறுதலே தேவை இல்லை
-சார்லி சாப்ளின்

உன்னை குறை கூறும்
பலருக்கு
உத்தமனாக வாழ்வதைவிட
உன்னை நம்பும் சிலருக்கு
நல்லவனாய் இரு

# சாதியை தேடுகிறார் ஈபிஎஸ் நீதியை தேடுகிறார் ஓபிஎஸ்

## முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் பேட்டி....

**அதிமுகவின் தோல்விக்கு எடப்பாடி பழனிசாமி தான் காரணம். எதிர்கட்சி தலைவர் பதவியில் இருப்பதற்கு அவர் தகுதியை இழந்துவிட்டார். எம்.ஜி.ஆர் வேர்வை சிந்தி, இரத்தம் சிந்தி இயக்கிய இந்த இயக்கம். ஒரு சாதியின் கையில் சிக்கி சீரழிந்து விடாமல் இயக்கத்தை பாதுகாக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் அதிமுக தொண்டர்களுக்கு உண்டு.**

அந்த அடிப்படையில் பொதுச் செயலாளரை தொண்டர்கள் தான் தேர்வு செய்யவேண்டும்.) ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் டெபாசிட் வாங்கியது ஆறுதலாக இருந்தாலும் தோல்வி என்பதும் அதிமுகவிற்கு வாக்கு வங்கி சரிவு என்பதும் மனவேதனை அளிக்கிறது.

எடப்பாடி பழனிசாமியை முன்னிறுத்தி போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் தோல்வியையே சந்தித்தோம். இடைத்தேர்தலில் அதிமுகவுக்கு பொதுமக்கள் யாரும் வாக்களிக்கவில்லை என ஓபிஎஸ் ஆதரவாளர் பண்ருட்டி ராமச்சந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.





சென்னை பசுமைவழிச் சாலையில் ஓபிஎஸ் இல்லத்தில் அவருடைய ஆதரவாளர் பண்ருட்டி ராமசந்திரன் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது.

ஓபிஎஸ் என்னிடம் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் குறித்து தனது உணர்வுகளை தெரிவித்தார். இந்த இடைத்தேர்தல் முடிவு பேரதிர்ச்சியையும், மனவேதனையையும் அளித்து இருக்கிறது. ஈரோடு பகுதி எங்களின் கோட்டை என தம்பட்டம் அடித்துக் கொண்டவர்கள் அவர்களே, இந்த தேர்தலை முன்னிருந்து நடத்த ஒத்துழைப்பு அளித்தோம். எம்.ஜி.ஆர் ரத்தத்தை வேர்வையாக மாற்றி இந்த கட்சியை அவர் வளர்த்தார். ஜெயலலிதா இந்த இயக்கத்தை அவரால் இயன்ற அளவு பாடுபட்டு பெரிய இயக்கமாக வளர்த்தார். எப்படி இருந்த நாம் இப்படி ஆகிவிட்டோமே என எண்ணுகிறது எங்களுக்கும்,

தொண்டர்களும் மனவேதனை ஏற்படுகிறது. யாரால் இந்த நிலைமை ஏற்பட்டது என்று எண்ணி பார்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

ஒருங்கிணைப்பாளர் என்ற நிலையை மாற்றி பொதுச்செயலாளர் பதவி உருவாக்க வேண்டும் என முனைத்தார்கள். உறுப்பினர்களால் தான் தலைமை பொறுப்பாளர் தேர்நதெடுக்கப்பட வேண்டும் என எம்.ஜி.ஆர் விதித்த அடிப்படை விதியை மாற்ற முயன்றார்கள் ஓபிஎஸ் மற்றும் கழக உறுப்பினர்களை உதாசினப்படுத்தினார்கள். இடை தேர்தல் வந்தபோது அதிமுக என்ற கட்சி வீணாக கூடாது என்பதற்காக உச்சநீதிமன்றம் இரட்டை இலை சின்னத்தை கொண்டு போட்டியிட தீர்ப்பு அளித்தார்கள்.

அதை நாங்கள் முழு மனதோடு ஏற்றுக்கொண்டோம். அந்த தீர்ப்பின் படியும் எடப்பாடி தரப்பு நடந்துக்கொள்ளவில்லை. அவர்களே ஒரு வேட்பாளரை வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுத்தார்கள். அதையும் நாங்கள் எதிர்க்கவில்லை தேர்தல் ஆணையம் இரட்டை இலை சின்னம் கிடைத்தால் போதும் என இருந்தோம். எங்கள் தரப்பு வேட்பாளரை வாபஸ் பெற்று நாங்களும் உழைக்கிறோம். என கூறியும் ஓபிஎஸையும் எங்கள் யாரையும் அழைக்கவில்லை. ஈரோடு கிழக்கு தொகுதியில் இருந்த ஓபிஎஸ் ஆதரவாளர்களை கூட தேர்தல் பணியில் ஈடுபடுத்தவில்லை இருப்பினும் இரட்டை இலை சின்னம் வெற்றி பெறமுடியவில்லை தோழ்வியடைந்துள்ளது. ஆனால் டெபாசிட் ஆவது பெற்றோம் என்பதை ஒரு ஆறுதலாக கருதுகிறோம். இதற்கெல்லாம் காரணம் எடப்பாடி என்கிற ஒரு தனிப்பட்ட நபரும், அவரை சேர்ந்தவர்களின் ஆணவப்போக்கும், யாரை அரவனைத்து செல்லாத தன்மை. எடப்பாடி பழனிசாமி முதல்வராக பொறுப்பேற்று அவரை முன்னிறுத்தி போட்டி யிட்ட அனைத்து தேர்தல்களிலும் தோல்வியையே சந்தித்தோம்.

பொதுமக்களை ஈர்க்கக் கூடிய தலைமை திட்டம். கொள்கை முன்வைக்கவில்லை அதுவே தோல்விக்கு காரணம். எடப்பாடியே எடுபடவில்லை எடப்பாடியின் பிரசாரம் எப்படி எடுபடும். எம்ஜிஆருக்கு இறுதி வரை வெற்றிமுகம் ஆனால் எடப்பாடி தொடக்கம் முதலே தோல்வி முகம் ஓட்டுநர் சரியில்லை என்றால் அவரை மாற்ற வேண்டும் இல்லையென்றால் பயணத்தை தொடரமுடியாது. அதிமுக பெற்ற வாக்குகளை விட காங், அதிமுக இடையே வாக்கு வித்தியாசம் அதிகம் இதைவிட வேதனை வேறு என்ன இருக்க முடியும் அவர்கள் ஜாதியை நோக்கி செல்கிறார். நாங்கள் நீதியை நோக்கி செல்கிறோம். அ.தி.மு.க.தொண்டர்களுக்கு இதனால் அவர் எம்.ஜி.ஆர். ஆட்சியை எப்படி கொண்டுவருவார். எடப்பாடியை பிடிக்கவில்லை அதை ஒப்புக்கொள்ள முடியாமல் பணநாயகம் என முழிக்கிறார்.


# அக்னி மலர்கள்

Editor / Publisher
**R.Panneerselvam**

Executive Editor
**Dr.R.Kannan**
**Delhi Guruji**
**Kavingar Anbudeepan MA., (Dharmapuri)**

Special Reporter
**Peyrumthazmilan**

Sub-Editor
**Agri.Dr.R.Venugopal M.Sc.,(Ag)**
**P.Shanmugam B.Sc.,(Ag.,)**
**N.Vijayarani B.Sc.,**
**R.Govindharaj**

Cheif Reporter
**Dinesh B.E.,**

Reporter
**K.Kannan BE.,**
**V.A.K.Kumarasamy B.Com., L.L.B.,**

Legal Advisors
**Judge K.Ramasamy BA.,BL.,**
**V.Gopinathan BA.,BL.,**
**V.Mohan BA.,BL.,**
**G.Sukumaran,**
**Associates & Consultants**
**Advocate, Editor-in-Chief, Bangalore**
**Ph: 97400 66322, (080)22213049**


**Advocate, Editor-in-Chief, Bangalore**
**Ph: 97400 66322, (080)22213049**


Layout
**V.Iyamperumal**

D.T.P.
**K.Vidhya**

Administrative Office
**Agnimalarkal**
**No.5, Muthukrishnan Street,**
**Pondy Bazar, T.Nagar**
**Chennai - 600 017**
**Ph : 044-28153055, 044-28154055**

email:
**agnimalarkalmonthly@gmail.com**

www. agnimalarkal.com



## அகில இந்திய தலைவரா மு.க.ஸ்டாலின்..

# பிரதமர் வேட்பாளரா...? கருணாநிதியின் மகன் ஏமாறமாட்டார்..!

**கடந்த 2021 சட்டமன்ற தேர்தல் வெற்றிக்கு பின்பு அகில இந்திய அளவில் பேசப்படும் நபராக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்க்கப்படுகிறார்.**

காங்கிரஸ் கட்சி முன்னணி தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல்காந்தி, தற்போதைய தலைவர் மல்லிகா அர்ஜுனகார்கே, மற்றும் மம்தா பேனர்ஜி, பரூக்அப்துலா, தேஜஸ்ஸ்ரீயாதவ், அகிலேஷ்யாதவ், போன்ற பக்கத்து மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்களும் மு.க.ஸ்டாலின் அவர்களை புகழ்ந்து தள்ளுவதிலும், பாராட்டுவதிலும், குறியாக இருக்கிறார்கள்.

தெலுங்கானா முதல்வர் சந்திரசேகரராவ், தன்னை முன்னிலைப்படுத்தி அகில இந்திய அளவில் ஒரு அணியை முன்னெடுத்து செல்வதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை முதல்வர் இல்லத்தில் நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தினார். முதல்வர் ஸ்டாலின் அவர்களோ காமராஜ் பாணியில் ஆகட்டும் பார்க்கலாம் என்று கூறி வழியனுப்பி வைத்திருக்கிறார். அதே போன்று திரிணாமூல் காங்கிரஸ் கட்சி தலைவர் மேற்குவங்க முதல்வர் செல்வி மம்தாபானர்ஜி, தமிழக முதல்வரை அவரது இல்லத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தினார். அவருக்கும் ஆறுதல் கூறி வழியனுப்பி வைத்துவிட்டார். இந்த சூழ்நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 70வது பிறந்தநாள் விழா மார்ச் முதல் தேதி சென்னையில் நடைபெற்ற பொழுது அதில் பங்கேற்று பேசிய ஜம்முகாஷ்மீர் மாநாட்டு கட்சியை சேர்நத பரூக்அப்துல்லா மேடையில் ஒரு விதமாகவும், மேடையில் இருந்து கீழே இறங்கி வரும் பொழுது செய்தியாளர்கள் சந்திப்பில் ஒருவிதமாகவும் பேசி மு.க.ஸ்டாலின் அவர்களை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியுள்ளார். அப்படி என்ன பரூக்அப்துல்லா பேசினார் என்றால் மேடையில் பிரதமர் மோடியை பற்றி விமர்சனம் செய்யாமல் எதிர்கட்சிகள் ஒற்றுமையை வலியுறுத்தி பேசியதோடு, சமூக நீதியை தமிழ்நாட்டில் நிலைநாட்டுவதை போல் அகில இந்திய அளவிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட வேண்டும் என்று பேசியதோடு அடுத்த பிரதமரை

அடையாளம் காட்டுகின்ற இடத்தில் நீங்கள் இருக்கிறீர்கள் என்ற தோணியில் பேசியவர் மீண்டும் செய்திளார்களிடம் பேசும் பொழுது மு.க.ஸ்டாலின் அவர்களை பிரதமர் வேட்பாளர் என்ற அளவிற்கு அறிவித்து விட்டு சென்று விட்டார் என்பது தான்.

அதே போல் உத்திரப்பிரதேச சமாஜ்வாஜ் கட்சியை சார்ந்த அகிலேஷ்யாதவ், பீகார் மாநிலம் ராஷ்ட்டிரிய ஜனதா தளம் கட்சியை சார்ந்த துணைமுதல்வர் தேஜஸ்டியாதவ் பேசும் பொழுதும் ஸ்டாலின் அவர்கள் மீது முழு நம்பிக்கை வைத்து பேசிவிட்டு சென்றுள்ளார்கள்.

ஆனால் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அகில இந்திய அளவில் பாஜக கட்சிக்கு மாற்றாக காங்கிரஸ் கட்சியை தவிர்த்துவிட்டுமற்றகட்சிகள் ஒன்றிணைந்தால் அது சாத்தியமில்லை. ஆகவே எதிர்கட்சிகள் எல்லாம் ஒரே அணியாக நின்று தேர்தலை சந்தித்தால் மட்டுமே எதுவும் சாத்தியமாகும் என்பது போல் மிக கடுமையாக தனது கருத்தை எதிர்கட்சிகள் மத்தியில் எடுத்து வைத்து உள்ளார்.

இந்தியாவை பொறுத்தவரை மூன்றாவது அணி என்பது கடந்த காலத்தில் பலமுறை முயற்சி செய்து அதில் தோல்வி அடைந்து இருக்கிறது. அதே நேரம் வெற்றியும் அடைந்து இருக்கிறது. ஆனால் நீண்ட நாள் நீடித்து இருக்க இயலவில்லை என்பதை மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்கு உணர்ந்தவர். மூன்றாவது அணியை உருவாக்க வேண்டும் என்று கடுமையான முயற்சியில் ஈடுபட்டு கடந்த காலங்களில் சந்திரபாபு நாயுடு அவர்கள் இன்றைக்கு தனிமைப்பட்டு இருப்பதை போல் மு.க.ஸ்டாலின் அவர்கள் தன்னை பிரதமர் வேட்பாளராகவோ அகில இந்திய தலைவராகவோ நினைத்துக் கொண்டு புகழ்ச்சியில் மயங்கி ஏமாறமாட்டார் என்பதே நிதர்சனமான உண்மை.

அதே போல் காங்கிரஸ் கட்சியை தவிர்த்து தேர்தலுக்குப் பிறகு பிரதமர் யார் என்பதை முடிவு செய்து கொள்ளலாம் என்ற முடிவையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்றுக்கொள்ள மாட்டார். வரும் நாடாளுமன்ற தேர்தல் வரை காங்கிரஸ் கட்சியை விட்டு விலகி இருக்கவும் மாட்டார். ஏற்கனவே ராகுல்காந்தி அவர்களை பிரதமர் வேட்பாளர் என்று பகிரங்கமாக அறிவித்து விட்டார். எனவே இன்னொருவரை பிரதமர் மோடிக்கு எதிராக பிரதமர் வேட்பாளர் என்று அறிவித்து ஏமாறவும் மாட்டார். மக்களை ஏமாற்றவும் மாட்டார். இது தான் இன்றைய திமுகவின் நிலைப்பாடு.

**- டெல்லிகுருஜி**

# செப்டம்பர் மாதம் முதல் பெண்களுக்கு ஆயிரம் ரூபாய் உரிமை தொகை

**திமுக தேர்தல் வாக்குறுதியில் கூறியுள்ளப்படி இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு பெண்களுக்கு ஆயிரம் ரூபாய் உரிமை தொகை வரும் செப்டம்பர் மாதம் அண்ணா பிறந்த நாள் அன்று வழங்கப்படும் என்று தமிழக சட்டப்பேரவையில் நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அறிவிப்பை வெளி யிட்டார்.**

இந்த அறிவிப்பு உடனடியாக நடைமுறைக்கு வரும் என்று ஆவலோடு காத்திருந்த குடும்ப தலைவிகளுக்கு காலதாமதமாக தான் கிடைக்கும் என்பதும், அதுவும் தகுதியுடையவர்களை கண்டறிந்து அதன் அடிப்படையில் தான் வழங்கப்படும் என்பதும், எல்லா பெண்களுக்கு கிடைக்குமா என்பதும், ஒருவித ஏமாற்றமாகவே இருப்பதாக பெண்கள் பார்க்கிறார்கள். சர்க்கரை கார்டுகளுக்கு எந்தவித சலுகையும் இல்லை என்பது போல் ஒருவேளை இந்த திட்டம் ஒரு குறிப்பிட்ட பெண்களுக்கு தான் வழங்கப்படும் என்பதால் ஏதோ தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றி விட்டோம் என்ற திருப்தியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது அமைச்சரவை சகாக்கள் ஆறுதல் அடையலாம். மொத்த மக்கள் தொகையில் எத்தனை பெண்கள் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள் என்பதை போகபோக தான் தெரிந்துக்கொள்ள முடியும். அதுமட்டுமல்ல அறிவிப்பு வெளியிட்டு 6 மாதங்கள் கழித்து தான் இந்த தொகை வழங்கப்படும் என்பது மேலும் பெண்கள் மத்தியில் ஒருவித ஏமாற்றமாகவே பார்க்கப்படுகிறது.

**- டெல்லிகுருஜி**

# டைட்டானிக் கப்பல் பயணம்... அதிர்ச்சி தரும் ஆதரவாளர்கள்...

## கரையேறுவாரா? எடப்பாடி பழனிசாமி...!

**க எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக செயல்பட துவங்கியது முதல் இடைக்கால பொதுச்செயலாளராக பதவி யேற்று தேர்தல் மூலம் பொதுச்செயலாளராக தன்னை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அதற் காக நாள் குறித்தார் எடப்பாடி பழனிசாமி. இப்பொழுது பொதுச் செயலாளராகவும் ஆகிவிட்டார்.**

சமீபத்தில் நடைபெற்ற மாவட்ட செயலாளர் கூட்டத்தில் இதுகுறித்து விவாதம் நடைபெற்ற பொழுது அந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி வரும் 26 ஆம் தேதி பொதுச்செயலாளர் பதவிக்கு தேர்தல் நடைபெறும் என்று தலைமை கழகம் அறி வித்துள்ளது. தேர்தல் ஆணையர்களாக முன்னாள் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன், பொள்ளாச்சி ஜெயராமன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். கட்சியின் சட்டதிட்ட விதிப்படி கட்சியின் அடிப்படை தொண்டர்களால் பொதுச்செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது விதி. இப்படி நிலைமை இருக்கும் பொழுது பொதுச்செயலாளர் பதவிக்கு யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம் ரூ.25000 பணம் கட்ட வேண்டும் என்பது உள்பட மாவட்ட கட்சி அலுவலகம் உள்ளிட்ட 84 இடங்களில் வாக்களிக்கும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அறிவிக்கப்பட்டு உள்ளது.



காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்கு பதிவு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை எதிர்த்து நீதி வேண்டி நீதிமன்றத்தை அணுகி உள்ளார் ஓ.பன்னீர்செல்வம். இது மட்டும் அல்ல செய்தியாளர்கள் சந்திப்பில் தேவைப்பட்டால் டிடிவி தினகரன் வாய்ப்பிருந்தால் சசிகலா இருவரையும் சந்தித்து பேசுவேன் என்றும் கூறியுள்ளார். இது தொண்டர்களின் மத்தியில் குழப்பமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஒருபுறம் நீதிமன்றம், மற்றொருபுறம் சசிகலா, தினகரன் என்ற அறிவிப்பு வெளியிட்டிருக்கும் ஓ.பன்னீர்செல்வம் அவர்களின் முடிவு என்பது எடப்பாடி பழனிசாமி அணிக்கு சாதகமாகவும் இருக்கின்றது. அதே நேரம் நீதிமன்றத்தின் தடை பெற்று தேர்தல்



# தப்பிக்க என்னவழி தொண்டர்கள் புலம்பல்..

நடைபெறாமல் தடுத்து நிறுத்தும் முயற்சியிலும் ஓ.பன்னீர்செல்வம் ஈடுபடலாம். இந்த முயற்சி அவருக்கு எந்த வகையில் பயனளிக்கும் என்பது தெரியவில்லை.

கடந்த காலங்களில் பொதுச்செயலாளர் பதவி தொண்டர்களால் மட்டுமே தேர்வு செய்ய வேண்டும் என்று கூறிவந்த ஓ.பன்னீர் செல்வம் அந்த தேர்தல் நடை பெறாமல் தடுக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் என்பதும், எதற்காக நீதிமன்றத்தை நாடினார் என்பதும் எடப்பாடி பழனிசாமி தரப்பினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தோழமை கட்சியான பாஜக கட்சி அதன் தலைவர் அண்ணாமலை திராவிட கட்சிகளின் கூட்டணி வேண்டாம் என்ற முடிவுக்கு வந்திருப்பதும், குறிப்பாக அதிமுக கூட்டணியை விட்டு வெளியேறுவதும் பற்றி பேசியிருப்பதும் இரு கட்சியினருக்கும் இடையே ஏற்பட்டுள்ள மன கசப்பிற்கு இதுவரை யார் மருந்து போடுவார்கள் என்பது புரியாத புதிராக உள்ளது.

குறிப்பாக பாஜக கட்சியில் இருந்த தகவல் தொழிற்நுட்ப பிரிவு மாநில தலைவர் நிர்மல் என்பவரை அதிமுகவில் சேர்த்ததும், அண்ணாமலையை விமர்சனம் செய்ததும், எடப்பாடி செய்த மிகப் பெரிய தவறு என்று அவரது ஆதரவாளர்களே பலர் கூறுகிறார்கள். இந்த செய்தி பாஜகவின் தேசிய தலைமை வரை சென்றிருப்பதால் எடப்பாடி பழனிசாமிக்கு மேலும் சிக்கல்

**கடந்த காலங்களில் பொதுச் செயலாளர் பதவி தொண்டர்களால் மட்டுமே தேர்வு செய்ய வேண்டும் என்று கூறிவந்த ஓ.பன்னீர் செல்வம் அந்த தேர்தல் நடை பெறாமல் தடுக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் என்பதும், எதற்காக நீதிமன்றத்தை நாடினார் என்பதும் எடப்பாடி பழனிசாமி தரப்பினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

மேல் சிக்கல் உருவாக்க கூடிய வகையில் பாஜக கட்சி எதிர்வினைகளை ஆற்றும், வாய்ப்பு ஏற்படும்.

அண்ணாமலை நேற்று வரை அதிமுகவில் நட்பு பாராட்டியதோடு ஒற்றை தலைமையையும், ஆதரித்து பேசியுள்ளார். தற்பொழுது அந்த தலைமையும் வேண்டாம் என்ற முடிவுக்கு அவர் வந்துள்ளார். இந்த நிலைப்பாடு மட்டும் அல்லாமல் தேவைப்பட்டால் கட்சி பதவியையும் ராஜினாமா செய்யும் அளவிற்கு சென்று உள்ளார் என்பதை பார்க்கும் பொழுது எடப்பாடி பழனிசாமியின் பயணம், “டைட்டானிக் கப்பல் பயணம் நினைவுக்கு வருகிறது”. இந்த பயணத்தில் இறுதியில்

ஏற்பட்ட அந்த முடிவு எடப்பாடி பழனிசாமிக்கும் ஏற்பட்டு விட கூடாது என்று சிலரும், அப்படி ஒரு நிகழ்வு ஏற்பட வேண்டும் என்று சிலரும், நினைக்கின்ற அளவிற்கு எடப்பாடி பழனிசாமி அவர்களின் செயல்பாடுகள் சென்று கொண்டிருக்கிறது.

அது மட்டும் அல்ல இப்படி ஒரு குழப்பமான சூழ்நிலையில், 2024 ஆம் ஆண்டு நடைபெற விருக்கும் நாடாளுமன்ற தேர்தலை கூட்டணி கட்சியோடு சந்திப்பதா? அல்லது பாஜக கட்சி தோழமையின்றி தேர்தலை எதிர்கொள்வதா என்ற குழப்பமான நிலையில் என்ன முடிவு எடுப்பது என்பதை உறுதி செய்வதற்கு முன்பாக பொதுச்செயலாளர் தேர்தல் தேதியை அறிவித்து கட்சியின் முழு அதிகாரம் பெற்ற ஒற்றை தலைமை தலைவராக தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு ஏற்பாடுகளை செய்துள்ளார்.

இந்த நிலையை உற்றுநோக்கும் அதிமுக தொண்டர்கள் ஒரு கோடியே ஐம்பது லட்சம் என்பது தேர்தலில் வாக்களிப்பதின் மூலம் எத்தனை பேர் வாக்களிக்கிறார்கள் என்பது தெளிவாக தெரிந்து விடும். ஒருவேளை மிக குறைந்த அளவு தொண்டர்கள் வாக்களித்து எடப்பாடி பழனிசாமியை பொதுச்செயளராக தேர்ந்தெடுக்கப்பட்டால் பெரும்பான்மை தொண்டர்களுக்கு எதிராக அமைந்து உள்ளதால் மீண்டும் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கும் நிலையை உருவாக்க கூடும்.

மகாபாரத கதையில் சக்கரவியூகத்தில் சிக்கிக் கொண்ட அபிமன்யுவை போல் எடப்பாடியின் நிலை உள்ளதா? அல்லது அம்பு படுக்கையில் மரணத்திற்கு போராடி கொண்டிருக்கும் பீஷ்மரை போல் உள்ளதா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இந்த நிலையில் பிரதமர் மோடி, அமிர்ஷா, பாஜக கட்சியின் தேசிய தலைவர் ஜே.பி.நட்டா ஆகியோரின் முடிவு எப்படி இருக்க போகிறது என்பதும், கூட்டணி குறித்து எடுக்கப்போகின்ற முடிவும், எடப்பாடி பழனிசாமிக்கு எந்த வகையில் கைகொடுக்கும் என்பதையும் பொறுத்திருந்து அபிமன்யுவா, பீஷ்மரா என்பதை முடிவு செய்யக்கூடும். தங்மணி, வேலுமணி, செங்கோட்டையன், சி.வி.சண்முகம், கே.பி.முனுசாமி போன்றவர்களின் அரசியல் நிலைப்பாடும் அவர்கள் வகுக்கும் வியூகமும் எத்தகைய வெற்றியை எட்டும் என்பதை வரும் நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் வெற்றியை உறுதிப்படுத்தும்.

**– டெல்லிகுருஜி**

# தமிழ்நாடு பட்ஜெட்: வெளிச்சம் தராத மின்மினி பூச்சி தி.மு.க.!

**அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத்தை அமுல்படுத்தா ததை கண்டித்து வெளிநடப்பு செய்த அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் எடப்பாடி பழனிசாமி இவ்வாறு கூறினார்.**



திமுக அரசின் மூன்று முறை பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மின் கட்டணம், சொத்துவரி, பால்விலை உயர்வு, இதுபோல் பல வரி உயர்வுகள் இந்த அரசு உயர்த்தி உள்ளது. இதுதான் அவர்கள் மக்களுக்கு அளிக்கும் பரிசு. பொருளாதாரத்தை பெறுக்க பன்னாட்டு குழு என்ன பரிந்துரைகளை வழங்கியுள்ளது அதன் மூலம் எவ்வாறு வருவாய் அதிகரித்துள்ளது என்பதை திமுக அரசு சொல்லவில்லை. அனைத்து வரிகளையும் உயர்த்திவிட்டு பட்ஜெட் அறிவிப்பு என்பது கடன் வாங்குகின்ற அளவிற்கு தான் உள்ளது. மொத்தத்தில் இந்த பட்ஜெட் கானல் நீர் தாகம் தீர்க்காது. நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் வெளிச்சம் தராத மின்மினி பூச்சி பட்ஜெட்டாகும் என்று கூறினார்.

**– டெல்லிகுருஜி**


DNC Groups
SINCE 1979
WINNER FOR
"MOST TRENDY SILK SAREE"
TIMES BUSINESS AWARDS
Sri Mahalakshmi Silk
#14/49, D.N.C. CHIT FUNDS BUILDING, NORTH BOAG ROAD,
T.NAGAR CHENNAI - 17 ( Behind T.Nagar AGS Theatre )
044 42133044
CAR PARKING AVAILABLE
CHIT SCHEME AVAILABLE

# விவசாயி வழங்கிய வேளாண் பட்ஜெட்..

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்



**2023**–24 ஆண்டுக்கான வேளாண் பட்ஜெட்டில் தாக்கல் செய்யப் பட்ட வேளாண் பட்ஜெட்டில் 38,904 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட ரூ.5897 கோடி கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*மூன்றாம் வேளாண் நிதிநிலை அறிக்கை, 2023- 24 ன் முக்கிய அம்சங்கள்*

*அ) முக்கிய நோக்கங்கள்*

1. *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒன்றான தொலைநோக்குத் திட்டத்தில்தமிழ்நாட்டின் நிகர சாகுபடிப் பரப்பினை உயர்த்துவது.*
2. *சிறுதானியங்களின் சாகுபடி, உற்பத்தியினை உயர்த்தி, பயன் பாட்டினை அதிகரிப்பது*
3. *இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தல்*
4. *பாரம்பரிய பயிர் இர கங்கள், பனை மரங்களை பாதுகாத்தல்*
5. *வேளாண்மை பணிகளை இயந்திர மயமாக்குதல்*
6. *வன விலங்குகளினால் ஏற்படும் பயிர் இழப்புக்கு தீர்வு காணுதல்*
7. *உழவர்களுக்கும், துறை அலுவலர் களுக்கும் உள்ள தொடர்பினை*





வலுப்படுத்துதல்

i. உழவர் அலுவலர் தொடர்புத்திட்டம் 2.0

ii. வட்டார அளவில் வேளாண் பொறியியல சேவை

iii. வட்டாரத்திற்கு ஒரு வேளாண் விஞ்ஞானி

iv. தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் விவசாயிகளுக்கு விரைவான சேவை

V. கிராம வேளாண் முன்னேற்றக் குழுக்கள்

8. பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்தல்

9. இளைஞர்களை வேளாண்மையில் முழுமையாக ஈடுபடுத்துதல்

i.வேளாண்,தோட்டக்கலைபட்டதாரிகளை தொழில் முனைவோராக்குதல்

ii. வேளாண் பொறியியலில் திறன்மேம்பாட்டு பயிற்சி

10.தோட்டக்கலைப் பயிர்களில் அணுகுமுறை தொகுப்பு

11. நீராதாரங்களை வலுப்படுத்தல்.

12. வேளாண் காடு வளர்ப்பு மூலம் விவசாயிகளுக்கு வருமானம்

13. விவசாயிகளுக்கு இலாபகரமான விலை கிடைக்கச் செய்து, உழவர் நலன் காத்தல்

14. ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல்

15. சிறப்பாக செயலாற்றும் விவசாயிகள், வட்டார அலுவலர்கள், ஆட்சியர்களுக்கு அங்கீகாரம்

16. அறுவடைக்குப்பின் மதிப்புக் கூட்டுதலுக்கும், பதப்படுத்துதலுக்கும் முக்கியத்துவம்.

17. வேளாண் ஏற்றுமதிக்கு சிறப்புக் கவனம் புவிசார் குறியீடு பெற்று, அகில உலகளவில் தமிழ்நாட்டு விளைபொருட்களை புகழ்பெறவைப்பது

*பயிர் பாதிப்பில் இருந்து விவசாயிகளை பாதுகாப்பதற்காக பயிர் காப்பீட்டு திட்டத்தில் மாநில அரசின் காப்பீட்டு கட்டண மானியத்திற்கு ரூ.2,337 கோடி நிதி ஒதுக்கீடு

*நூற்பாலைகளுக்கு தேவையான பஞ்சை தமிழகத்திலேயே உற்பத்தி செய்யும் வகையில் ரூ.12 கோடி நிதி ஒதுக்கீட்டில் பருத்தி இயக்கம் செயல்படுத்தப்படும்.

*தென்னை வளர்ச்சி மேம்பாட்டிற்கு ரூ.20 கோடி தேசிய அளவில் தென்னை உற்பத்தியில் தமிழகம் முதலிடம் அடைய தென்னை வளர்ச்சி மேம்பாட்டு திட்டம்

*எண்ணெய் வித்துகளின் உற்பத்தியை

அதிகரிக்கும் வகையில் 14 மாவட்டங்களை உள்ளடக்கிய சிறப்பு மண்டலம்

*ரூ.33 கோடி நிதி ஒதுக்கீட்டில் சூரியகாந்தி, நிலக்கடலை உள்ளிட்ட எண்ணெய் வித்துகளின் உற்பத்தியை அதிகரிக்க சிறப்பு திட்டம்*உடலுக்கு தேவையான புரதச்சத்தை வழங்கும் பயிரு வகைகளின் பரப்பளவையும், உற்பத்தியையும் அதிகரிக்க ரூ.30 கோடி ரூபாய் மதிப்பில் பயிறு பெருக்குத் திட்டம்.

*ரூ.50 கோடி நிதியுதவி மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, தேனி வளர்ப்பு போன்ற பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ள நிதியுதவி மற்றும் வட்டியில்லா கடன்.

*விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், வாடகை மையங்கள் உள்ளிட்டவைக்கு ரூ.125 கோடி நிதி*பனை சாகுபடியினை ஊக்குவித்து, பனை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ரூ.2 கோடி ஒதுக்கீடு

*வேளாண் மகத்துவத்தை பள்ளி மாணவர்கள் அறிந்து கொள்வதற்காக கல்வித் துறையுடன் இணைந்து பண்ணை சுற்றுலா செயல்படுத்த ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு

*உலக சந்தையில் தேனி மாவட்ட வாழைக்கு தனி அடையாளம் உருவாக்கிட, ரூ.130 கோடி மதிப்பீட்டில் வாழைக்கான தனி தொகுப்பு திட்டம்

*முந்திரி சாகுபடியை கூடுதலாக 550 ஹெக்டேர் அதிகரிக்கவும், வயது முதிர்ந்த, விளைச்சல் குறைந்துள்ள முந்திரி மரங்களை அகற்றி, உயர் விளைச்சல் ரக செடிகளை 500 ஹெக்டேரில் நடவு செய்து புதுப்பிக்கவும் நடவடிக்கை

*வெளிநாட்டு வேளாண் தொழில்நுட்பங்களை தெரிந்து கொண்டு, தமிழகத்தில் பின்பற்றும் வகையில் விவசாயிகள் வெளிநாட்டில் பயிற்சி பெற ரூ.3 கோடி ஒதுக்கீடு

*பாதுகாக்கப்பட்ட சாகுபடி முறையை பரவலாக்க ரூ.22 கோடி ஒதுக்கீடு பசுமை குடில், நிழல் வலைக்குடில் அமைத்து உயர்மதிப்புள்ள காய்கறிகள் மற்றும் பூக்கள் ஆண்டு முழுவதும் சாகுபடி

*அனைத்துகிராமஒருங்கிணைந்தவேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு கிராமங்களிலும் தலா 300 குடும்பங்களுக்கு மா, கொய்யா, பலா, நெல்லி, எலுமிச்சை, சீதாப்பழம் போன்ற பல்லாண்டு பழச்செடி தொகுப்பு விநியோகத்திற்கு ரூ.15 கோடி ஒதுக்கீடு

*தண்ணீர் பற்றாக்குறை பகுதிகளில் 53400 ஹெக்டேர் நுண்ணீர் பாசன முறையினை நிறுவவதற்கு மானியமாக ரூ.450 கோடி ஒதுக்கீடு

*ஆயிரம் ஹெக்டேரில் சௌசௌ, பட்டாணி, பீன்ஸ் போன்ற குளிர்கால காய்கறிகள் சாகுபடியை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக ரூ.2.5 கோடி நிதி ஒதுக்கீடு

*பலாப்பழத்தில் புதிய ரகங்கள், உயர் மகசூல், மதிப்பு கூட்டும் தொழில் நுட்பங்களை மேம்படுத்துவதற்காக பாலூர் காய்கறி ஆராய்ச்சி நிலையத்தில் பலா ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும்.




*தேனி, திண்டுக்கல், கரூர், தூத்துக்குடி, திருப்பூர், அரியலூர், மதுரை மாவட்டங்களை உள்ளடக்கி முருங்கை ஏற்றுமதி மண்டலத்தில் 1000 ஹெக்டேரில் சாகுபடியை உயர்த்த ரூ.11 கோடி

*ராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி மாவட்டங்களில் மிளகாய் உற்பத்தியை அதிகரிக்க மிளகாய் மண்டலம் அமைக்கப்படும்

*பூச்சிகள் விற்பனை கூடங்கள் மறுகட்டமைப்பு 27 சேமிப்புக் கிடங்குகளில் ரூ.50 கோடியில் கட்டமைப்பு வசதிகள் புதுப்பிக்கப்படும். அதிக வரத்துள்ள 100 விற்பனை கூடங்களில் ரூ.50 கோடியில்

கட்டமைப்பு வசதிகள் புதுப்பிக்கப்படும்.

*அரசம்பட்டு தென்னை, கிருஷ்ணகிரி பன்னீர் ரோஜா, மூலனூர் குட்டை முருங்கை உள்ளிட்ட 10 பொருள்கள் அகில உலக அளவில் புவிசார் குறியீடு பெற நடவடிக்கை எடுக்கப்படும்*தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்களில் காவிரி வெண்ணாறு பகுதிகளில் வாய்க்கால்களை தூர்வாருவதற்கு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் 1,32,000 ஏக்கர் நிலப்பரப்பு பயன்பெறும். இவ்வாறு பட்ஜெட்டில் அமைச்சர் கூறியுள்ளார்.

மொத்தத்தில் இந்த வேளாண் பட்ஜெட் வாழ்வாதாரத்திற்கும் நவீன விவசாய கருவிகளை கொண்டு வருவதற்கும், வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், பல்வேறு வகையில் விவசாயிகளுக்கு நம்பிக்கை ஊட்ட கூடிய வகையில் இந்த வேளாண் நிதி நிலை அறிக்கை பல்வேறு திட்டங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. வேளாண் துறைக்கு கடந்த ஆண்டை விட இந்த ஐந்தாயிரம் கூடுதலாக நிதி வழங்கியிருப்பது வேளாண் துறை மீது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதிக கவனம் செலுத்த உள்ளார் என்பதையும், வெளிப்படுத்துகிறது. அதே நேரம் தங்கள் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை கொண்டு சிறப்பான பலமான திட்டங்களையும், சலுகைகளையும் அறிவித்து ஒட்டுமொத்த விவசாயிகளின் நன்மதிப்பையும், வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பெற்றுள்ளார் என்பதை காணமுடிகிறது. ஒரு விவசாயி என்பதால் இதில் கூடுதல் கவனம் செலுத்தி அறிக்கையை தயாரித்துள்ளார் என்பதும், இந்த நிதி நிலை அறிக்கை மூலம் தெளிவாக தெரிகிறது. இரண்டாவது முறையாக வேளாண் நிதிநிலை அறிக்கையை எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேரவையில் தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வேளாண் துறைக்கு இன்னும் சில கூடுதலாக நிதி ஒதுக்கீட்டை முதல்வரும் நிதியமைச்சரும், ஒதுக்கியிருந்தால் அவர்களை பாராட்டி வாழ்த்தலாம். அடுத்தாண்டு இன்னும் கூடுதல் நிதி ஒதுக்கப்படலாம் என நினைக்கலாம்.

# ராம நவமி வழிபாடு.. இடிந்து விழுந்த கோவில் கிணறு.. 25 பேரின் கதி என்ன?

**மத்தியப் பிரதேசத்தில் கோவில் கிணறு ஒன்று பாரம் தாங்காமல் இடிந்து விழுந்தது. இதில், 25 பேர் சிக்கியுள்ளனர்.**

மத்தியப் பிரதேச மாநிலம் இந்தூரில் உள்ள பட்டேல் நகரில் பழங்கால கோவில் ஒன்று அமைந்துள்ளது. இந்தக் கோவிலில் இன்று ராம நவமி பூஜை நடைபெற்றது.

அப்போது கோவில் கிணற்றின் அருகிலும் அதன் மேலேயும் பக்தர்கள் இருந்துள்ளனர். இந்த நிலையில் கிணறு பாறம் தாங்காமல் இடிந்து விழுந்தது.

இதில் இடிபாடுகளில் சிக்கிய 10 பேர் இதுவரை மீட்கப்பட்டுள்ளனர். இடிபாடுகளில் 25க்கும் மேற்பட்டவர்கள் சிக்கியிருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. மீட்புப் படையினர் பணியை துரிதப்படுத்திவருகின்றனர்.



இந்தச் சம்பவம் துரதிருஷ்டவசமானது எனக்கூறியுள்ள அம்மாநில முதல் அமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான், விபத்தில் சிக்கியவர்களுக்கு மருத்துவ உதவிகள் அளிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் தாம் காயமுற்றவர்களுடன் தொடர்பில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.




# ராகா (RAGA) சென்னை யூனிட்

**(ஓய்வு பெற்ற வேளாண் பட்டதாரிகள் சங்கம் Retired Agricultural Graduates Association)**

**“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்வர்.” என்ற குறள் உழவின் முக்கியத்துவத்தை கலங்கரை விளக்காக தெரிவிக்கிறது.**

இந்த உழவு தொழிலிலே விவசாயம் சிறப்புற விதை முதல் விளைச்சல் வரை உள்ள சீர்மிகு சாகுபடியில் உள்ள தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்கி வருவது விவசாய பட்டதாரிகள். இவர்கள் ஓய்வுபெற்ற பிறகு இணைந்து ஏற்படுத்தப்பட்ட சங்கம் தான் ராகா என்பது. ராகா சென்னை யூனிட் 2023 ம் வருட Bi Monthly Metting 26.2.23 என்று அசோக்நகரில் 48வது தெரு, எண்.25/53, சென்னை-83 என்ற விலாசத்தில் ராகாவின் மாநில தலைவர் ப.சுதாகர் தலைமையில் கூட்டம் சிறப்பாகவும், பொறுப்பாகவும், மகிழ்வுடனும் நடைபெற்றது.

கடந்த 5 வருடமாக சென்னை யூனிட் டில் தலைவராக இருந்த பி.செல்வராஜ் அவர்கள் காலை 10.30 மணி அளவில் கடவுள் வாழ்த்துடன் கூட்டத்தை துவக்கி பல செய்தி களை பகிர்ந்து கொண்டு பல மணி நேரம் கூட்டத்தை சிறப்பாக நடத்தி கொடுத்தார்.

கூட்டத்தில் மாநில பொருளாளர் ஏ.சாம்பசிவம், செயலாளர் கே.கணேசன், துணைத் தலைவர் என்.திருமாவளவன் ஆகியோர்கள் கலந்து கொண்டு ராகாவின் கொள்கைகளையும், செய்ய வேண்டிய சேவைகளைப் பற்றியும், ஓய்வு ஊதியத்தில் ஏற்படும் பிரச்சனைகளையும், அதற்கான தீர்வுகளையும் விரிவாக விளக்கி கூறினார்கள்.



இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு ராகா உறுப்பினர்களின் திருமண நாள், பிறந்த நாள் நிகழ்ச்சிகளுக்கு கேக் வெட்டி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். இந்த கூட்டத்தின் கலந்து கொண்ட ராக உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மனதாக தமிழகத்தில் பல மாவட்டங்களிலும், இந்தியாவில் பல மாநிலங்களிலும் கரும்பிலே 36 வருட பணி செய்த ஆர்.வேணுகோபால் அவர்களை ராகா சென்னை யூனிட்டின் புதிய

தலைவராகவும், தமிழக வேளாண் துறையில் துணை இயக்குனராகி பணியாற்றி விவசா யிகளின் Zoom Meetingல கலந்து கொண்டும் சிறந்த மேன்மையான சேவை புரிந்து வரும் கே.ராசு அவர்களை செயலாளராகவும் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

**சிறப்புகள்**

1.அதிக அளவில் ராக உறுப்பினர்கள் கலந்து கொண்டு மேலும், திருப்பதி கார்வேட்நகர் போன்ற அதிக தொலைவிலிருந்து உறுப்பினர்கள் பங்கெடுத்து கொண்டது.

2.கவிஞர் குடும்பத்திலிருந்து விவசாய அதிகாரி சீனிவாசன் கலந்து கொண்டு அவர் கருத்துக்களை பகிர்ந்து கொண்டது.

3.பொருளாளர் எஸ்.சோமசுந்தரம் உடல் நிலை சரியில்லாத நிலையிலும், காலத்தே வந்து பொருளுடனும், அருளுடனும் அனைத்து உறுப்பினர்களையும் கவனித்துக் கொண்டார்.

4.இப்போது ஐ.டி துறையில் உள்ள என்.பி.சுரேஷ்பாபு விவசாயத்துறையில் உள்ள வாய்ப்புகளை பற்றியும் அவர் செய்யப்போகும் சேவைகளை பற்றியும் பகிர்ந்து கொண்டது.

5.உயர்ந்த மனிதர், உயரத்தில் மட்டும் அன்று, உள்ளத்திலும் இல்லத்திலும் உயர்ந்த வரான பொது மாநில




தலைவர் பி.சுதாகர் கூட்டத்தின் அனைத்து பணிகளையும் சீரும் சிறப்புமாக நடத்திக் கொடுத்த சிறந்த மாமனிதர், மனித நேயம் கொண்ட பணியாளர்.

6.88 வயதான ர.பிரேம்நாதன் ஐயா, ராக உறுப்பினர், மூத்த குடிமகன், பல விவசாய பட்டதாரிக்கு பாடம் கற்பித்த பேராசிரியர் இவர். இந்த கூட்டத்தில் பங்கேற்றது அனைவருக்கும் உற்சாகத்தையும், எல்லை யில்லா இனி மகிழ்ச்சியும் அளித்தது.



கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி கூற இந்த ஆண்டு முதல் Bi-Monthly Meeting சிறப்பாக முடிவுற்றது. "ராகா"வின் சேவை வளர்க வாழ்க"

இவண்

**- அக்ரி ஆர்.வேணுகோபால்**



**சென்ஜான் அம்புலன்ஸ் அசோசியன்ஸ் முதலுதவி சிசிக்சை மையத்தில் உள்ள கௌரவ செயலாளராக ஜி.சந்தானம் ஐஏஎஸ் (ஓ) அவர்கள் நியமனம் செய்யப்பட்டு அதற்கான ஆணையத்தை மேதகு ஆளுநர் ரவி அவர்களால் பெற்றுக்கொண்டார்.**



# புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்துதான் ஒரே தீர்வு - சட்டமன்றத்தில் ரங்கசாமி

**புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோரி 14வது முறையாக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், மக்கள் நலனை செயல்படுத்துவதில் சங்கடம் இருப்பதால் மாநில அந்தஸ்துதான் ஒரே தீர்வு என முதல்வா் ரங்கசாமி தெரிவித்துள்ளார்.**

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோரி 14வது முறையாக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், மக்கள் நலனை செயல்படுத்துவதில் சங்கடம் இருப்பதால் மாநில அந்தஸ்துதான் ஒரே தீர்வு என முதல்வர் ரங்கசாமி தெரிவித்துள்ளார்

புதுச்சேரி சட்டப்பேரவை கூட்டத் தொடரின் இறுதி நாளான இன்று,புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சுயேச்சை எம்எல்ஏ நேரு தனிநபர் தீர்மானம் கொண்டு வந்தனர்.இதற்கு அனைத்து கட்சி மற்றும் சுயேச்சை சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

இதனையடுத்து பேசிய முதலமைச்சர் ரங்கசாமி பேசியதாவது: "இந்த சட்டப்பேரவையில் ஒரு மனதாக இவ்வளவு தெளிவாக அனைத்து எம்எல்ஏக்களும் பேசி பார்த்ததில்லை. அனைத்து கட்சி எம்எல்ஏக்கள்ம் பேசினர். அவ்வளவு வலி. அரசு தீர்மானமாக மத்திய அரசுக்கு கொண்டு சென்று மாநில அந்தஸ்து பெறுவோம். நல்ல நேரம் கூடி வந்துள்ளது. நல்லது நடக்கும். மாநில அந்தஸ்து கிடைக்கும். அந்த நேரம் வந்துள்ளது. அதனால் சட்டப்பேரவையில் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை அரசு தீர்மானமாக கொண்டு சென்று வலியுறுத்தி பெறுவோம். வெற்றியை பெறுவோம். எம்எல்ஏக்கள் அனைவரையும் அழைத்து சென்று பிரதமர், உள்துறை அமைச்சர் அமைச்சர்களை சந்தித்து பேசி இந்த ஆண்டுக்குள் மாநில அந்தஸ்தை பெறுவோம்" என முதல்வர் நம்பிக்கை கூறினார். அதையடுத்து அனைத்து எம்எல்ஏக்களும் எழுந்து நின்று கைத்தட்டி வரவேற்றனர்.

இதையடுத்து, எதிர்க்கட்சியினர் தாங்கள் கொண்டு வந்த தீர்மானத்தை திரும்ப பெற்றவுடன், அத்தீர்மானம் அரசு தீர்மானமாக நிறைவேறுவதாக பேரவைத் தலைவர் செல்வம் அறிவித்தார்.



# புற்றுநோய்

**புற்று நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உலகம் முழுவதும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 14 லட்சம் பேர் இந்தியாவில் புற்று நோயால் பாதிக்கபடுகிறார்கள்.**

ஆண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்களில் வாய்ப்புற்றுநோய் முதலாம் இடத்திலும், பெருங்குடல் புற்று நோய் நான்காம் இடத்திலும் உள்ளது. பெண் களுக்கு ஏற்படும் புற்றுநோயில் மார்பகப் புற்றுநோய் முதல் இடத்திலும், பெருங்குடல் புற்றுநோய் ஐந்தாம் இடத்திலும் உள்ளது. 75 வயதை கடந்தவர்களில் 9 பேரில் ஒருத்தருக்கு புற்றுநோய் பாதிப்பு இந்தியாவில் ஏற்படுகிறது.

பெருங்குடல் புற்றுநோய் ஏன் ஏற்படுகிறது? வந்தால் என்ன செய்யவேண்டும்? வருமுன் காப்பது எப்படி? என்பதை கீழ்கண்ட கட்டுரையில் காண்போம்.



நமது உணவு மண்டலம் உணவுக்குழாய், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல், கல்லீரல், கணையம், மண்ணீரல் மற்றும் பித்தப்பை அடங்கியதாகும். இதில் பெருங்குடல் மற்றும் மலக்குடலில் ஏற்படும் புற்றுநோய் பற்றி இங்கு காணலாம். பொதுவாக பெருங் குடல் புற்றுநோய் மேற்கத்திய நாடுகளில் தான் அதிகம். அந்த பழக்கவழக்கங்கள் இங்கே பரவுவ தால், இந்தியாவிலும் பெருங்குடல் மற்றும் மலக்குடல் புற்றுநோய் அதிகளவில் காணப்படுகிறது.

இதற்கு மரபுவழிக் குறைபாடு, பரம்பரையாக வருவது மற்றும்



பெருங்குடலில் உள்ள நீட்சிகள் (Polyps) புற்றுநோயாக மாறுவது முக்கியமான காரணங்களாகும். பெருங்குடலில் ஏற்படும் புற்றுநோயில் சுமார் 90%க்கு மேல், குடலில் உள்ள கட்டிகள் வளர்ந்து நாளடைவில் புற்றுநோயாக மாறும். இது சுமார் 60 முதல் 80 வயதானவர்களுக்கே வரும்.

நாள்பட்ட கணக்கில் சரிவரக் கவனிக்கப் படாத பெருங்குடல் புண்கள் (ULLERATIVE COLITIS, SOLITARY RECTAL ULCER) கூட புற்றுநோயாக மாறலாம். மேலும் அதிகப்படியான கொழுப்பு உள்ள உணவை சாப்பிடுவதாலும் (ஆடு, மாடு மற்றும் பன்றி இறைச்சி) குறைந்த அளவில் நார்ச்சத்து உள்ள உணவை உண்பதாலும் பெருங்குடலில் புற்றுநோய் வரும். நீண்ட காலத்திற்கு புகைப்பிடிப்பதாலும் (15 முதல் 20 ஆண்டுகள்) மற்றும் மது அருந்துவதாலும் புற்றுநோய் வரும்.

ஒரு சில குடும்பங்களில் பரம்பரையாக (FAMILIAL) புற்றுநோய் வரும். எனவே அண்ணனுக்கோ, அப்பாவுக்கோ வந்தால் மற்றவர்களும், கண்டிப்பாக முழு உடல் பரிசோதனை செய்துக் கொள்ள வேண்டும். மரபு வழிக் குறைபாடுகளால் குடல் புற்றுநோய் வருகிறது. மேலும், அதிக உடல் உழைப்பின்மைக் (Sedentary lifestyle) காரணமாகவும் புற்றுநோய் வரலாம். இதில் பெருங்குடலில் 100 முதல் ஆயிரக்கணக்கில் கட்டிகள் (Familial Polyposis Coli HNPCC) இருக்கும் இவை பின்னர் புற்றுநோயாக மாறும். பொதுவாக இவை இளம் வயதிலேயே (40 வயதிலேயே) வரும்.

பொதுவாக வலப்பக்க பெருங்குடலில் புற்றுநோய் வந்தால், அதிகப்படியான இரத்தப் போக்கும், வயிற்றுப்போக்கும் இருக்கும். இதனால் இரத்தசோகை நோய் வரும். இடதுபக்க பெருங்குடலிலும், மலக்குடலிலும் புற்றுநோய் வந்தால் அடைப்பு ஏற்படும். இதனால் மலச்சிக்கல் உண்டாகும். மலத்தில் இரத்தப்போக்கு இருக்கும். பசியின்மை, உடல் எடை குறைதல் மற்றும் வயிற்று வலியும் உண்டாகும்.



**இதனை அறிய உள்ள பரிசோதனை முறைகள் என்ன?**

இரத்தப் பரிசோதனை மூலம் இரத்த சோகை உள்ளதா, இல்லையா என்பதை அறியலாம். CT Scan மூலமாக புற்றுநோய் பாதித்து உள்ள பகுதியையும், மற்றும் மற்ற உறுப்புகளுக்கு (குறிப்பாக கல்லீரல்) பரவியுள்ளதா என்பதை அறியலாம்.

**இதற்கான சிகிச்சை முறைகள் என்னென்ன?**

1.அறுவை சிகிச்சையே

சிறந்த முறையாகும். இதனை சாதாரண அறுவை சிகிச்சை மூலமாகவும், லேப்ராஸ்கோப்பி அறுவை சிகிச்சை மூலமாகவும் செய்யலாம். மற்றும் Chemotherapy, Radio Therapy யும் மிக முக்கியமாகும். பெருங்குடல் புற்றுநோயை நான்கு நிலைகளாக பிரிக்கலாம். இந்த நிலைகளைப் பொறுத்தே சிகிச்சை முறை தீர்மானிக்கப் படுகிறது.

**2.முதல் நிலை பெருங்குடல் புற்றுநோய்க்கு அறுவை சிகிச்சை மட்டும் போதும்.**

3.இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை பெருங்குடல் மற்றும் மலக்குடல் புற்று நோய்க்கு அறுவை சிகிச் சைக்கு முன்னால் பிசியோ தெரபியும் தேவைப்பட்டால் Radio therapy யும் கொடுக்கப்பட்டு, பின்பு புற்றுநோய் பாதிக்கப்பட்ட குடல் பகுதி அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டு, நல்ல குடல் பகுதிகள் மீண்டும் இணைக்கப்படும். இதனை ஷிஜிகி நிலிணிஸி பயன்படுத்தியும் செய்யலாம்.

4.நான்காம் நிலை மிக முற்றிய நிலையாகும். இதில் குடல் பகுதியில் அடைப்பு ஏற்பட்டிருக்கும். எனவே அவசர சிகிச்சையாக Colostomy செய்யப்பட்டு Radiotherappy மற்றும் Chemotherapy கொடுத்த பின்பு அறுவை சிகிச்சை மூலம் புற்றுநோய் பாதித்தப்பகுதி அகற்றப்படும் இதனையே Palliative Surgery என்கிறோம்.

இவ்வாறு புற்றுநோய் நான்காம் நிலைக்கு பரவாமல், நோயின் ஆரம்ப நிலையிலேயே



கண்டறிந்து, புற்றுநோய் பாதித்த பகுதியை முழுவதுமாக, அகற்றினால் புற்றுநோயை முற்றிலுமாக குணப்படுத்த முடியும்.




**பெருங்குடல் புற்றுநோய் வராமல் தடுக்க கீழ்கண்டவற்றை பின்பற்றுவது நல்லது.**

1. அதிகளவில் காய்கறிகள் மற்றும் பழவகைகள் உண்ணுதல்.
2. ஆப்பிள், வாழைப்பழம், பெர்ரி வகை வழங்கள், ஆரஞ்சுப்பழம், மாதுளை போன்றவை அதிகமாக உண்ணுதல்.
3. உணவில் பூண்டு, வெங்காயம் மற்றும் அதிகளவில் தக்காளி போன்றவை சேர்த்துக் கொள்வது நல்லது.
4. மஞ்சள், கீரை வகைகள் அதிகளவில் எடுத்துக் கொள்ள வேண்டும்.
5. பால் சார்ந்த பொருட்கள் குடல் புற்றுநோயினை தடுக்கும்.
6. முறையான உடற்பயிற்சி மற்றும் நடைப்பயிற்சி செய்தல்.
7. Omega-3, Vit B மற்றும் Folic Acid போன்றவை எடுத்துக் கொள்ளுதல் நல்லது.
8. Green Tea ஒரு நாளைக்கு 3 அல்லது 4 முறை எடுத்துக் கொள்ள வேண்டும்.
9. சர்க்கரைவள்ளிக் கிழங்கு புற்றுநோய் செல்களின் வளர்ச்சியை தடுக்கிறது.
10. முட்டை அதிகளவில் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

**Dr.R.Kannan, Chairman**
M.S., DNB(SGE), FICS(Gastro)., FAIS., FMAS., FIAGES., FACRSI., FIMSA., DMAS (France)., FALS (UGI)., FALS(HPB)., FALS (Colorectal)., FALS (Hernia)
இரைப்பை, குடல், கல்லீரல் மற்றும் லேப்ராஸ்கோப்பி அறுவை சிகிச்சை நிபுணர்

ராகுல்காந்தி அவதூறு பேசியதற்காக பதவி பறிக்கப்பட்டதா?

# பிரதமர் மோடிக்கு சவாலாக இருப்பதால் இந்த தண்டனையா...?




**பாரத் ஒற்றுமை பயணம் மேற்கொண்ட ராகுல்காந்தி அரசியல் ரீதியாக இந்தியா முழுவதும் மக்களின் கவனத்தை ஈர்த்ததோடு பாஜக கட்சிக்கும், பிரதமர் மோடிக்கும் பெரும் சவாலாக இருந்தார் என்றே கூறலாம்.**

இது மட்டுமல்ல நாடாளுமன்றத்தின் ராகுல்காந்தியின் உரை பிரதமர் மோடி அவர்களையும், பாஜக கட்சியையும், பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்க கூடும் என்ற பேச்சு அரசியல் வட்டாரத்தில் மட்டும் அல்லாமல் பொதுமக்கள் மத்தியிலும் பேசும் பொருளாக அமைந்துள்ளது. டீக்கடையில் தொடங்கி, இந்தியாவில் உள்ள குக்கிராமங்கள் வரை ராகுல்காந்தி குறித்த பேச்சு பொதுமக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றதுடன், வரும் நாடாளுமன்ற தேர்தலில் (2024) மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், காங்கிரஸ் கட்சியின் பலத்தை உறுப்படுத்துகின்ற அளவில் பாரத் ஜூடோ நடைப்பயணம் அமைந்துள்ளது.

குறிப்பாக அதானி குழும நிறுவனங்கள் குறித்து அதில் நடைபெற்ற மோசடிகள் குறித்து இன்டன் பர்க் என்ற நிறுவனம் சமீபத்தில் ஒரு அறிக்கையை வெளியீட்டு இந்திய அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திடியதுடன் அதானி நிறுவனங்களின் பங்குகள் மிகப் பெரிய அளவில் சரிவை சந்தித்ததுடன், இன்றும் பங்கு சந்தையில் சரிவை சந்தித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் தாக்கமும், ராகுல்காந்தியின் மீது மத்திய அரசுக்கு கோபம் வருவதற்கு காரணம் ஆகிவிட்டது என்றே கூறலாம்.

பிரதமர் மோடி அவர்கள் குறித்தும் அவரது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துகின்ற



ராகுல்காந்தி பேசினார் என்று குஜராத் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்தது. நீண்டநாட்களுக்குப் பிறகு அந்த வழக்கு தீர்ப்பு வெளியாகி இரண்டு ஆண்டுகள் ராகுல்காந்திக்கு தண்டனை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உடன் அடுத்த 24 மணி நேரத்திற்குள்ளாக அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டு கேரள மாநிலத்தில் உள்ள வயநாடு நாடாளுமன்ற தொகுதி காலியாக உள்ளது என்ற அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது என்பதை பார்க்கும் பொழுதுஇதுஜனநாயகத்திற்குஏற்பட்டிருக்கிற ஒரு சவாலாகவே பார்க்கப்படுகிறது.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றாலும் இதற்கு முன் தண்டனை பெற்ற பலர் ஊழல் குற்றச்சாட்டிற்காக தண்டனைப் பெற்று பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ராகுல்காந்தியை பொறுத்தவரை அவர் மீது எந்தவித ஊழல் குற்றச்சாட்டும் இடம் பெறாத நிலையில் அவதூறு வழக்கிற்காக அவர் தண்டனை பெற்றுள்ளார். மேலும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளப்படி முப்பது நாட்கள் கால அவகாசம் வழங்கியுள்ளது. இப்படி பட்ட நிலையில் ஏன் அவசர அவசரமாக அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்படுகிறது என்பதை பார்க்கும் பொழுது இதற்கு சரியான பதிலை மக்கள் மன்றத்தில் தான், ராகுல்காந்தி அவர்கள் தேட வேண்டும்.

நாடாளுமன்றத்திற்கும்,சட்டமன்றத்திற்கும் உறுப்பினர்களை அனுப்பி வைக்கும் பொறுப்பு ஜனநாயக நாட்டில் மக்களுக்கு தான் அதிகாரம் உள்ளதே தவிர, எந்த ஒரு

**ராகுல்காந்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிப்பால் எதிர்கட்சிகளின் பலம் மேலும் வளர்ச்சி அடைவதற்கும் ஒத்துமையை உறுதிப்படுத்துவதற்கும், வரும் நாடாளுமன்ற தேர்தலில் ஒரே திசையில் நின்று பாஜக கட்சிக்கு எதிராக வெற்றி வியூகங்களை வகுப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. இதனால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 2024 தேர்தலில் கூடுதலாகும் வாய்ப்பும் உள்ளது.**

**மத்தியில் ஜனதா கட்சி ஆட்சியில் இருந்து பொழுது இந்திராகாந்தி அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது. அதை ஏற்றுக்கொண்ட அவர் மீண்டும் மக்கள் மன்றத்திற்கு சென்று மீண்டும் காங்கிரஸ் கட்சியை ஆட்சியில் அமர்த்தி பிரதமர் பதவியில் அமர்ந்து ஆட்சி நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.**

தனிமனிதருக்கும் இப்படிப்பட்ட அதிகாரம், சட்டத்தால் வழங்கப்படுவதில்லை. ஆகவே ராகுல்காந்தி அவர்கள் நாட்டிற்காகவும், நாட்டு மக்களுக்காகவும் எந்தவித தியாகத்தை செய்வதற்கும், அதற்காக என்ன விலை கொடுப்பதற்கும் தயாராக இருப்பதாக கூறியுள்ளார். மத்திய அரசின் இந்த நடவடிக்கை குறித்து பல்வேறு கட்சி அரசியல் தலைவர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதுடன், தாங்கள் ஏன் ஒன்றுப்பட வேண்டும் என்ற ஒரு நிலைக்கு வந்துள்ளார்கள் என்பதையும், பார்க்க முடிகிறது. இந்த தீர்ப்பின் மூலம் ராகுல்காந்தி அவர்கள் இன்னும் சில ஆண்டுகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கும், பிரதமர் பதவிக்கும் அவர் வரமுடியாது என்பதால் இந்த சந்தர்ப்பம், இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு எதிர்கட்சிகள் இந்தியா முழுவதும் பாஜக கட்சிக்கு எதிராக ஓர் அணியில் திரள்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றே கூறலாம்.

மக்கள் மன்றத்தில் உண்மையை பேசியதற்காக பழிவாங்கப்பட்டிருக்கிறார் ராகுல்காந்தி எனவும், ஜனநாயகத்தை காக்க சிறைக்கும் செல்வோம் என்கிறார் காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய தலைவர் மல்லிகா அர்ஜுனா கார்கே. இது திட்டமிட்டு செய்யப்பட்ட தகுதிநீக்கம் என்கிறார் திருநாவுக்கரசு எம்.பி., ஒன்றிய அரசின் யதோச்சார போக்கை காட்டுகிறது இது பழிவாங்கும் நடவடிக்கை. தேர்தலில் போட்டியிட விடாமல் செய்ய சதி திட்டம் இது என்கிறார் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன். ராகுல்காந்தி தகுதி நீக்கம் செய்ததன் மூலம் பாஜக அரசின் சர்வாதிகாரப் போக்கு வெளிப்படையாக தெரிகிறது என்கிறார் திமுக செய்தி தொடர்பாளர் ஆர்.எஸ்.பாரதி. 2024 தேர்தலில் பாஜகவுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்றும் கூறுகிறார். அரசியலில் இருந்து ராகுல்காந்தியை ஒதுக்குவதற்காகவே பாஜக அரசு இவ்வாறு செயல்பட்டுள்ளது என்கிறார் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி. ஒன்றிய பாஜக ஆட்சி அகற்றப்பட வேண்டும் என்பதற்கு வேறு எந்த காரணமும் தேவையில்லை. இது உள்நோக்கத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்கிறார் இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன். ராகுல்காந்தியை தகுதிநீக்கம் செய்ததை பழிவாங்கும் நடவடிக்கையாகவே நான் பார்க்கிறேன் என்கிறார் மார்க்சிட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பேசியதற்கே ராகுல்காந்தியை தகுதிநீக்கம் செய்திருக்கிறார்கள் என தமிழ்நாடு சட்டப்பேரவையில் அவை முன்னவரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் தெரிவித்துள்ளார். ஆனால் பேரவையில் ஜனநாயக முறைப்படி எதிர்கட்சியினரை தாங்கள் பேச அனுமதிக்கிறோம் என்றும் அவர் கூறியுள்ளார். ஜனநாயகத்தின் புதிய வீழ்ச்சியை இந்தியா கண்டுள்ளது, என மேற்குவங்க முதல்வர் மம்தா பேனர்ஜி கடுமையாக சாடியுள்ளார்.

ராகுல்காந்தியின் தகுதி நீக்கம் குறித்து, தொடர்ந்து சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தி வரும் காங்கிரஸ் கட்சி தங்கள் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்தும் ஆலோசித்து வருகின்ற நிலையில் மத்திய அரசை கண்டித்து இந்தியா முழுவதும் காங்கிரஸ்காரர்கள் தங்கள் எதிர்ப்பை தெரிவித்து பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டுவருவதுடன் 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்கு தங்களை தயார்ப்படுத்திக் கொண்டு பாஜக கட்சிக்கு எதிராகவும் பிரதமர் மோடியை எதிர்த்தும், அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், இந்தியா முழுவதும் உள்ள எதிர்கட்சிகளை ஒருங்கிணைத்து பாஜக கட்சி எதிராக அணி திரட்டி எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் பாஜக கட்சியை தோற்கடிக்க வேண்டும் என்கிற ஒரு மெகா திட்டத்தையும் எதிர்கட்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். இதையும் கடந்து மீண்டும் பாஜக மத்தியில் ஆட்சி அமைந்தால் எத்தகைய மாற்றங்களை கொண்டு வரும் என்பதை நினைத்து பார்க்கும் பொழுது அச்சப்படாமல் இருக்க முடியாது.

சட்டம் தன் கடமையை செய்யட்டும். மக்கள் மன்றம் நல்ல தீர்ப்பை எழுதட்டும். சாதாரண மனிதருக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் மட்டுமே ராகுல்காந்திக்கும் கிடைக்கும் என்கிறார் தமிழ் மாநில பாஜக தலைவர் அண்ணாமலை.

– டெல்லிகுருஜி



# இலங்கைக்கு கை கொடுக்கும் சர்வதேச நாணய நிதியம்.. என்ன நடக்கிறது?

**சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) $2.9 பில்லியன் விரிவாக்கப்பட்ட நிதிக்கு இலங்கை தகுதி பெற்றுள்ளது. அதன் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இது உதவிகரமாக இருக்கும்.**

சர்வதேச நாணய நிதிய வாரியம் இறுதியாக இந்த ஏற்பாட்டில் நாட்டின் மிகப்பெரிய இருதரப்பு நன்கொடையாளர்களான சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகியோரிடமிருந்து கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான தேவையான நிதி உத்தரவாதங்களைப் பெற்ற பிறகு கையெழுத்திட்டது.

இதைத் தொடர்ந்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்திற்கு நன்றி தெரிவித்து ட்வீட் செய்துள்ளார்.

அந்த ட்வீட்டில், “நாடு சுதந்திரம் அடைந்த 75 ஆண்டுகளில் இதுபே□ன்ற ஒரு சிக்கலான பொருளாதார நிலை ஏற்பட்டதில்லை.

இந்த நிலையில், மிவிதி நிர்வாகக் குழு எங்கள் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மிவிதி மற்றும் மிதிமி களில் இருந்து $7தீ வரை நிதியுதவி பெற இலங்கைக்கு உதவுகிறது. சர்வதேச நாணய நிதியம் மற்றும் எங்கள் சர்வதேச பங்காளிகளின் ஆதரவுக்கு நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி இலங்கையின் நெருக்கடியை சமாளிக்க முதல் தவணையாக $33 மில்லியன் போதுமானதாக இல்லை என்றாலும், விக்கிரமசிங்க தனது ட்வீட்டில் குறிப்பிட்டுள்ளபடி, சர்வதேச தனியார் கடன் வழங்குநர்களிடம் நாடு அதன் நம்பகத்தன்மையை மீட்டெடுக்க இது உதவும்.

இலங்கையின் பிரதான எதிர்க்கட்சிகள், மக்கள் குழுக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் நாட்டின் அரசியல் தலைமைத்துவத்தில் வியத்தகு மாற்றத்திற்கு வழிவகுத்த கடந்த ஆண்டு அரகலயா இயக்கத்தை வழிநடத்திய விக்ரமசிங்கே மீது கடும் கண்டனத்திற்கு உள்ளான நேரத்தில் வாரியத்தின் பச்சை விளக்கு வந்துள்ளது.




முன்னதாக, பல செயற்பாட்டாளர்களை தன்னிச்சையாக கைது செய்தமை உட்பட, எதிர்ப்புக்களை கட்டுப்படுத்துவதற்கு விக்ரமசிங்க உயர்தர முறைகளை பயன் படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டது.

பதவிநீக்கம்செய்யப்பட்ட ராஜபக்ச மற்றும் அவர்களது கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை உள்ளடக்கிய தனது தரப்பு விக்கிரமசிங்கவின் நம்பிக்கையின்மையால் ஒத்திவைக்கப்பட்டதாக எதிர்க்கட்சிகள் நம்பினாலும், நிதிப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதையும் அவர் ஒத்திவைத்துள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பிற்கு ஆதரவளிப்பதாக இருதரப்பு நன்கொடையாளர்களிடமிருந்து உறுதியளிக்கப்பட்டது, IMF உடனான ஏற்பாட்டைத் திறக்க இலங்கை சந்திக்க வேண்டிய ஒரு முன்நிபந்தனையாகும்.

2022 டிசம்பருக்கு முன்னர் இது நடக்கும் என்று நாட்டிற்கு உறுதியளித்த விக்கிரமசிங்க, சீனா கடினமாக விளையாடியதால் காலக்கெடுவை மேலும் தள்ளினார்.

இறுதியாக, மார்ச் 7 அன்று, சீன எக்ஸிம் வங்கி அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் “புதிய கடிதத்தை” அனுப்பியதாக விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் கூற முடிந்தது. ஜனவரி மாதம், எக்ஸிம் வங்கி, இலங்கையின் கடன் மீதான இரண்டு வருட கால அவகாசத்தை கடைபிடிக்க தயாராக இருப்பதாக கூறியிருந்தது.

**2022 டிசம்பருக்கு முன்னர் இது நடக்கும் என்று நாட்டிற்கு உறுதியளித்த விக்கிரமசிங்க, சீனா கடினமாக விளையாடியதால் காலக்கெடுவை மேலும் தள்ளினார்.**

இந்த முறை, ராய்ட்டர்ஸின் அறிக்கையின்படி, வங்கியின் கடிதம் இரண்டு ஆண்டு கால தடையை மீண்டும் வலியுறுத்தியது, மேலும் வரவிருக்கும் மாதங்களில் கடன் சிகிச்சையின் பிரத்தியேகங்களை பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தது.

IMF தரவை மேற்கோள் காட்டி, 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கை Exim வங்கிக்கு $2.83 பில்லியன் அல்லது மொத்த வெளிமத்திய அரசாங்கக் கடனில் கிட்டத்தட்ட 9% கடன்பட்டிருப்பதாக அறிக்கை கூறியுள்ளது.

இருதரப்பு மற்றும் தனியார் கடன் வழங்குநர்கள் உட்பட 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன் 82 பில்லியன் டாலர்களாக இருந்தது, இதில் 2 பில்லியன் டாலர்கள் இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் செலுத்தப்பட வேண்டும்.

# சி.பி.எம் வேட்பாளர் தேர்தல் செல்லாது – கேரள ஐகோர்ட்

**இடுக்கி மாவட்டத்தில் உள்ள தேவிகுளம் சட்டமன்றத் தொகுதியின் சி.பி.எம் சட்டமன்ற உறுப்பினர் ஏ. ராஜாவின் தேர்தல் வெற்றி செல்லாது என்று கேரள உயர்நீதிமன்றம் திங்கள்கிழமை அறிவித்தது. ஞானஸ்ஞானம் பெற்று கிறிஸ்தவரான அவர், பட்டியல் இன (எஸ்சி) உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதியில் போட்டியிடத் தகுதியற்றவர் என்று அறிவித்துள்ளது.**

2021 தேர்தலில் ஏ. ராஜாவிடம் தோல்வியடைந்த காங்கிரஸ் வேட்பாளர் டி. குமார் தாக்கல் செய்த மனுவில் கேரள உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவு வந்துள்ளது. ஏ. ராஜா ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர் என்றும் அவர் மதம் மாறிய பிறகு எஸ்சி சமூகத்தைச் சேர்ந்தவராக இருக்க முடியாது என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக, நீதித்துறை மற்றும் சட்டமன்றத்தில் முஸ்லீம் மற்றும் கிறிஸ்தவ தலித்துகளுக்கு எஸ்சி அந்தஸ்தை நீட்டிக்க முடியுமா என்ற கேள்வியை பரிசீலனை செய்கிறது.

### மத்திய அரசின் நிலைப்பாடு என்ன?

நவம்பர் 2022ல், 'பொது நல வழக்கு மற்றும் பிறர் எதிரி மத்திய அரசு என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் இந்தப் பிரச்சினையை பரிசீலித்தது. அப்போது, தற்போதைய வழக்கில் சவால் செய்யப்பட்ட அரசியலமைப்பு (பட்டியல் சாதிகள்) ஆணை, 1950 வரலாற்றுத் தரவுகளின் அடிப்படையில் அமைந்தது என்று மத்திய அரசு சமர்ப்பித்தது. கிறிஸ்தவ அல்லது இஸ்லாமிய சமூகத்தின் உறுப்பினர்களால் ஒருபோதும் பின்தங்கிய நிலை அல்லது ஒடுக்குமுறையை எதிர்கொள்ளப்படவில்லை என்று நிறுவியது.

மத்திய அரசு தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில், தலித்துகள் இஸ்லாம் அல்லது கிறித்துவ மதத்திற்கு மாறுவதற்குக் காரணம், இந்து மதத்தில் உள்ள தீண்டாமை என்ற அடக்குமுறை அமைப்பில் இருந்து வெளியே வர வேண்டும் என்றும், இது இரண்டு மதங்களிலும் இல்லை என்றும் கூறியுள்ளது.

மதம் மற்றும் மொழி ரீதியான சிறு பான்மையினருக்கான தேசிய ஆணையத்தின் அறிக்கையின் மறுப்புக் குறிப்பையும் மேற்கோள் காட்டி, இஸ்லாமும் கிறிஸ்தவமும் சாதி அமைப்பை அங்கீகரிக்காத வெளிநாட்டு



மதங்கள் என்று மத்திய அரசு கூறியுள்ளது. மதம் மாறியவர்களுக்கு எஸ்சி அந்தஸ்து வழங்குவது அந்த மதங்களில் ஜாதி அமைப்பை அறிமுகப்படுத்துவதாக அமையும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.



இதற்கு முன், அக்டோபர் 7, 2022 அன்று, முன்னாள் தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன் தலைமையில், வரலாற்று ரீதியாக பட்டியல் சாதிகளைச் சேர்ந்தவர்கள் என்று கூறி, பின்னர் மதங்களுக்கு மாறிய நபர்களுக்கு எஸ்சி அந்தஸ்து வழங்குவது குறித்து ஆய்வு செய்வதற்காக, மூன்று பேர் கொண்ட ஆணையத்தை மத்திய அரசு அமைத்தது. தவிர, அரசியலமைப்பின் 341வது பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட குடியரசுத் தலைவரின் உத்தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆணையம் 2024ல் தனது அறிக்கையை சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் முஸ்லீம் மற்றும் கிறிஸ்தவ தலித்துகளுக்கான இடஒதுக்கீடு குறித்த கேள்வி உச்ச நீதிமன்றத்தில் பதிலளிக்கப்படவில்லை.

## அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட சாதிகள்) ஆணை, 1950 என்றால் என்ன?

1950 ஆம் ஆண்டில், அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட போது, அரசியலமைப்பின் (பட்டியல்சாதிகள்)ஆணை,அரசியலமைப்பின் 341வது பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது. அதில் குடியரசுத் தலைவர் எந்த மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தின் சாதிகள், இனங்கள் அல்லது பழங்குடியினர் அல்லது பகுதிகளை பகிரங்கமாக அறிவிக்கலாம். "இந்த சாதிகள், இனங்கள் அல்லது பழங்குடியினர் அல்லது சாதிகள், இனங்கள் அல்லது பழங்குடியினருக்குள் உள்ள குழுக்கள் அல்லது குழுக்களைக் குறிப்பிடவும், இந்த அரசியலமைப்பின் நோக்கங்களுக்காக அவை பட்டியல் சாதியாகக் கருதப்படும்." என்று அறிவிக்கலாம்.

உண்மையான உத்தரவு 1950ல் நிறைவேற்றப்பட்டது மற்றும் இந்துக்களை மட்டுமே எஸ்சிகளாக வகைப்படுத்த அனுமதித்தது. இருப்பினும், அரசியல் அழுத்தத்தை அடுத்து 1956ல் சீக்கியர்களையும், 1990ல் பௌத்தர்களையும் உள்ளடக்கியதாக அது பின்னர் திருத்தப்பட்டது. இந்தத் திருத்தங்கள் இருந்தபோதிலும், பிற்படுத்தப்பட்ட சமூகங்களை கிறிஸ்துவர் மற்றும் முஸ்லிம்களுக்குள் எஸ்சி என்ற வரையறையின் கீழ் சேர்க்க எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.

## யு.பி.ஏ அரசாங்கத்தின் இரண்டு அறிக்கைகள்

அக்டோபர் 2004ல், டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலான யு.பி.ஏ அரசாங்கம், மதம் மற்றும் மொழி ரீதியான சிறுபான்மையினரிடையே சமூக மற்றும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் நலனுக்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்காக, முன்னாள் தலைமை நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா தலைமையில், மதம் மற்றும் மொழி ரீதியான சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையத்தை நிறுவியது.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, மே 2007 ல், ரங்கநாத் மிஸ்ரா ஆணையம் அதன் அறிக்கையை சமர்ப்பித்தது. பட்டியல் சாதியினரின் வகைப்பாட்டில் இருந்து மதத்தை முழுமையாக நீக்குவதற்கு பரிந்துரைத்தது. இடஒதுக்கீடுகள் மதம் இல்லாமல் இருக்க வேண்டும் என்றும், சமூக பொருளாதார அளவுகோல்கள் அத்தகைய வகைப்படுத்தலுக்கு அடிப்படையாக இருக்க வேண்டும் என்றும் ஆணையம் பரிந்துரைத்தது. இருப்பினும், போதுமான கள தரவுகள் இல்லாத காரணத்தினால் இந்த பரிந்துரைகளை நாடாளுமன்றம் நிராகரித்தது.

இந்த தெளிவின்மையைத் தீர்க்க, யு.பி.ஏ அரசாங்கம் 2005ல் இந்திய முஸ்லிம்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை ஆராய சச்சார் குழுவை அமைத்தது. மதமாற்றத்திற்குப் பிறகும் தலித் முஸ்லீம்களின் நிலைமை மேம்படாமல் இருப்பதைக் கவனித்த கமிட்டி 2006ல் தனது அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கை முஸ்லீம்களை எஸ்சி மற்றும் எஸ்டி பிரிவுகளுக்கு கீழே பின்தங்கிய நிலையில் வைத்துள்ளது. முஸ்லிம்களின் மக்கள்தொகை சதவீதத்திற்கும் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் போன்ற முடிவெடுக்கும் பதவிகளில் உள்ளவர்களின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள பொருத்தமின்மை என பல பிரச்சினைகள் முன்னிலைப்படுத்தப்பட்டது.

# வீனஸில் ஆக்டிவ் எரிமலை கண்டுபிடிப்பு

**மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட காப்பக ரேடார் படங்களின் புதிய பகுப்பாய்வு, முதன்முறையாக பூமியின் டிவின் என்று அழைக்கப்படும் வீனஸின் மேற்பரப்பில் சமீபத்திய எரிமலை செயல்பாட்டின் நேரடி புவியியல் ஆதாரங்களைக் கண்டறிந்துள்ளது.**

சுமார் எட்டு மாதங்களில் எரிமலை வென்ட் அதன் வடிவத்தை மாற்றி பெரியதாக்கி உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் அறிந்துள்ளனர் என்று நாசா கூறியுள்ளது.

புதிய கண்டுபிடிப்புகள், கடந்த வாரம் சயின்ஸ் இதழில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வில் விவரிக்கப்பட்டுள்ளது. 'மெகல்லன் பணியின் போது வீனஸ் எரிமலையில் காணப்பட்ட மேற்பரப்பு மாற்றங்கள்' என்ற தலைப்பில் ஆய்வு கட்டுரை வெளி யானது. அலாஸ்கா ஃபேர்பேங்க்ஸ் பல்கலைக் கழகத்தின் (அமெரிக்கா) புவி இயற்பியல் நிறுவனத்தைச் சேர்ந்த ராபர்ட் ஹெரிக் மற்றும் கலிபோர்னியா இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (அமெரிக்கா) ஜெட் ப்ராபல்ஷன் ஆய்வகத்தின் (ஜேபிஎல்) ஸ்காட் ஹென்ஸ்லி ஆகியோர் இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டனர்.

பல ஆண்டுகளாக, ஏராளமான எரி மலைகள் வீனஸை உள்ளடக்கியதாக விஞ் ஞானிகள் அறிந்திருக்கிறார்கள், ஆனால் அவற்றில் ஏதேனும் இன்னும் செயலில் உள்ளதா என்பதைக் காட்ட இதுவரை எந்த ஆதாரமும் இல்லை.

தி இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸிடம் பேசிய ஹெரிக், வீனஸ் எதிர்கால வெடிப்புகளைக் கொண்டிருக்கும் என்பதை அனைவரும் அறிந்திந்தனர். எவ்வாறாயினும், எத்தனை முறை வெடிப்புகள் நிகழ்கின்றன என்பது தெரியவில்லை, மேலும் வீனஸ் பூமிக்கு அருகில் இருப்பதை நாம் இப்போது அறிவோம், இருப்பினும் ஒரு தரவுத் தொகுப்பில் இருந்து விரிவுபடுத்த வேண்டும்.

## கண்டுபிடிப்புகள் என்ன?



*1990 மற்றும் 1992க்கு இடையில் நாசாவின் மாகெல்லன் விண்கலம் எடுத்த வீனஸின் படங்களை விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர்.*

அவர்கள் ஆய்வின் போது, கிரகத்தின் அட்லா ரெஜியோ பகுதியைப் பார்த்தனர். அங்கு வீனஸின் இரண்டு பெரிய எரிமலை களான

ஓசா மோன்ஸ் மற்றும் மாட் மோன்ஸ் அமைந்துள்ளது தெரியவந்தது. இந்த எரிமலை செயலில் இருப்பது போல் தெரிந்தது. அதன் வடிவத்தில் மாற்றம் இருந்ததையும் ஆராய்ச்சியாளர்கள் கண்டனர்.

பிப்ரவரி ரேடார் படத்தில், இந்த வென்ட் பகுதி 2.6 சதுர கிமீ பரப்பளவை உள்ளடக்கிய செங்குத்தான சுவர்களுடன் கிட்டத்தட்ட வட்டமாகவும் ஆழமாகவும் தோன்றியது. எவ்வாறாயினும், எட்டு மாதங்களுக்குப் பிறகு எடுக்கப்பட்ட படங்களில், அதே வென்ட் 3.9 சதுர கிமீ பரப்பளவைக் கொண்டிருக்கும் போது, வெளிப்புறத்தில் ஒழுங்கற்றதாகவும், ஆழமற்றதாகவும், கிட்டத்தட்ட நிரம்பியதாகவும் இருந்தது. இது வென்ட்டின் அடியில் மாக்மாவின் வெடிப்பு அல்லது ஒட்டத்தைக் குறிக்கிறது.

மெக்லலன் விண்கலத்தின் ரேடார் படங்களை ஹெரிக் நூற்றுக்கணக்கான மணிநேரங்களுக்கு ஆய்வு செய்ய வேண்டியிருந்ததால் புதிய கண்டுபிடிப்புகள் எளிதில் வரவில்லை. இந்த படங்கள் இன்று விண் கலத்தில் இணைக்கப்பட்ட கேமராக்களால் எடுக்கப்பட்ட படங்களை விட மிகக் குறைந்த தெளிவுத்திறன் கொண்டவை மற்றும் ஒப்பீட்டளவில் மிகவும் கடினமாக இருந்தது என்று ஆராய்ச்சியாளர் கூறினார்.



# அதிகரிக்கும் இன்ஃப்ளூயன்சா பாதிப்புகள்!

**காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில், கடந்த வாரம் மத்திய அரசு ஆய்வுக் கூட்டத்தை நடத்தியது. மாநில அரசாங்கங்கள் விழிப்புடன் வைரஸ் தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவமனைகளை தயார்படுத்துகின்றன.**

இன்ஃப்ளூயன்ஸா வைரஸின் H3N2 துணை வகை காரணமாக, ஹரியானாவில் ஒன்று மற்றும் கர்நாடகாவில் ஒன்று என மத்திய சுகாதார அமைச்சகம் மார்ச் மாதம் குறைந்தது இரண்டு இறப்புகளை உறுதிப்படுத்தியது.

இருப்பினும், ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டத்தின் தரவு, ஜனவரி மாதத்தில் மட்டும் காய்ச்சலால் குறைந்தது ஒன்பது பேர் இறந்ததாகக் கூறுகிறது.

### காய்ச்சல் பாதிப்புகள் ஏன் அதிகரிக்கின்றன?

மத்திய சுகாதார அமைச்சகம் வழங்கிய தரவுகளின்படி, மார்ச் 9 ஆம் தேதி வரை நாடு முழுவதும் ஆய்வகத்தால் உறுதிப்படுத்தப்பட்ட 3,038 காய்ச்சல் பாதிப்புகள் பதிவாகியுள்ளன. இது வழக்கத்திற்கு மாறாக அதிகமானதல்ல. குறிப்புக்காக, கடந்த ஆண்டு மொத்தம் 13,202 பாதிப்புகள் பதிவாகியுள்ளன. எவ்வாறாயினும், உண்மையான எண்ணிக்கை அதிகமாக இருக்கக்கூடும், ஏனெனில் அனைவருக்கும் காய்ச்சல் பரிசோதனை செய்யப்படுவதில்லை மற்றும் அனைவரின் முடிவும் எப்போதும் அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்படுவதில்லை.

பாதிப்புகளின் தற்போதைய அதிகரிப்புக்கு பல காரணங்கள் உள்ளதாக அதிகாரிகள் மற்றும் நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஒன்று, இது காய்ச்சல் காலம். இந்தியா வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் இரண்டு காலகட்டங்களில் அதிக காய்ச்சல் பாதிப்பை எதிர்கொள்கிறது. முதலில் ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு இடையில் மற்றும் மீண்டும் ஆகஸ்ட் மற்றும் அக்டோபர் மாதங்களுக்குப் பிந்தைய பருவமழை காலத்தில். மாறிவரும் பருவங்கள் வைரஸ் பரவுவதற்கான சரியான சூழலை உருவாக்குகின்றன. ஆனால் தற்போது புழக்கத்தில் இருப்பது வெறும்

காய்ச்சல் மட்டும் அல்ல. அடினோவைரஸ் மற்றும் கோவிட்19 போன்ற பிற சுவாச நோய்த்தொற்றுகளின் நிகழ்வுகளும் அதிகரித்துள்ளன.

மூத்த அரசு அதிகாரி ஒருவர் பெயர் வெளியிட விரும்பாத நிலையில், "டெல்லியில் மட்டும் சுவாச அறிகுறிகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளை பரிசோதித்தபோது, 10% பேருக்கு மட்டுமே காய்ச்சல் (பி3ழி2) இருப்பது கண்டறியப்பட்டது. மற்றொரு 15% பேருக்கு உண்மையில் கோவிட்19 இருந்தது. கடந்த இரண்டு வாரங்களாக ஐந்து தென் மாநிலங்கள் மற்றும் குஜராத்தில் கோவிட் 19 பாதிப்புகள் அதிகரித்துள்ளது" என்று கூறினார்.

இரண்டு, தொற்றுநோய்களின் போது குறைவான காய்ச்சல் தொற்றுகள், மக்கள்தொகையில் பெரும் பகுதியினருக்கு நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைத்துவிட்டது. "ஒவ்வொரு ஆண்டும், இன்ஃப்ளூயன்ஸாவின் துணை மருத்துவ பரவல் உள்ளது மற்றும் மக்கள் அதற்கு சில நோய் எதிர்ப்பு சக்தியைப் பெறுகிறார்கள். மேலும், மேற்கு நாடுகளைப் போலல்லாமல், ஃப்ளூ காய்ச்சல் காரணமாக அதிக இறப்புகளை நாம் காணவில்லை. ஆனால் தொற்றுநோய்களின் போது, மக்கள் முகக்கவசம் அணிந்து, நெரிசலான பகுதிகளிலிருந்து விலகி, கூட்டங்களைத் தவிர்த்தனர், எனவே இந்த பரவல் ஏற்படாது. ஆனால், இந்த ஆண்டு அதிகரிப்பு உள்ளது" என்று தேசிய நோய் கட்டுப்பாட்டு மையத்தின் முன்னாள் இயக்குநரும் ஆலோசகருமான டாக்டர் சுஜீத் சிங் கூறினார். 2020 மற்றும் 2021 இல் முறையே 2,752 மற்றும் 778 என குறைவான காய்ச்சல் பாதிப்புகள் பதிவாகியுள்ளன.



மூன்று, ஃப்ளூ வைரஸ் அதன் கட்டமைப்பை மாற்றுவதற்கு அதிக வாய்ப்புள்ளது. "இந்த மாற்றங்களால் பொதுவாக ஒவ்வொரு வருடமும் காய்ச்சல் பாதிப்புகள் அதிகரிப்பதைக் காண்கிறோம்" என்று சுஜீத் சிங் கூறினார்.

நான்கு, கடுமையான நோய்க்கான ஆபத்து காரணிகளான இளைஞர்களிடையே கூட நீரிழிவு மற்றும் இதய நோய் போன்ற நாள்பட்ட நிலைமைகளின் பெரும் சுமையை இந்தியா கொண்டுள்ளது. மேலும், கோவிட்19 போலல்லாமல், வருடாந்திர காய்ச்சல் தடுப்பூசி அரசாங்க அமைப்புகளில் உடனடியாகக் கிடைக்காது மற்றும் பொதுமக்கள் பலர் அதை எடுத்துக்கொள்வதில்லை.

## இன்ஃப்ளூயன்சா காய்ச்சலால் மக்கள் இறப்பது வழக்கத்திற்கு மாறானதா?

உண்மையில் அது இல்லை.

கோவிட்19 ஐப் போலவே, இது பெரும்பாலானவர்களுக்கு காய்ச்சல், இருமல் மற்றும் மூக்கு ஒழுகுதல் போன்ற லேசான அறிகுறிகளை ஏற்படுத்துகிறது, ஆனால் நிமோனியா மற்றும் கடுமையான சுவாசக் கோளாறு நோய்க்குறி போன்ற சிக்கல்களுக்கு வழிவகுக்கும்.

மிகச் சிறிய குழந்தைகள், முதியவர்கள், இதய நோய், சர்க்கரை நோய், சிறுநீரக நோய் போன்ற இணை நோய்கள் உள்ளவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பலவீனமான நோயெதிர்ப்பு அமைப்பு உள்ளவர்கள், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்தவர்கள் போன்றவர்களுக்கு கடுமையான நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

கடந்த ஆண்டு 410 பேர் இன்ஃப்ளூயன்சா நோய்த்தொற்றால் உயிரிழந்துள்ளனர். ஆகஸ்டில் சுவாச நோய்த்தொற்றுகளின் அதிகரிப்பின் போது பெரும்பாலான பாதிப்புகள் மிகவும் பொதுவான துணை வகை பி1ழி1 காரணமாக ஏற்பட்டாலும், வைரஸ் கண்டறியும் ஆய்வகங்களின் மிசிவிஸி நெட்வொர்க் டிசம்பரில் பி3ழி2 பாதிப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியதை கண்டறிந்தது.

## பி3ழி2 இன்ஃப்ளூயன்ஸாவின் புதிய துணை வகையா?

இல்லை, இது இன்ஃப்ளூயன்ஸா வைரஸின் துணை வகைகளில் ஒன்றாகும், மேலும் இது பருவகால நோய்த்தொற்றுகளை ஏற்படுத்துவதாக அறியப்படுகிறது, 2009 ஆம் ஆண்டு முதல் புழக்கத்தில் உள்ள தொற்றுநோய் துணை வகை பி1ழி1 போன்றது. உண்மையில், துணை வகை பி3ழி2 1968 இல் காய்ச்சல் தொற்றுநோயை ஏற்படுத்தியது.

"இந்த துணை வகை முதன்முதலில் 1996 இல் இந்தியாவில் கண்டறியப்பட்டது, பின்னர் கடுமையான பாதிப்புகளையும் ஏற்படுத்தியது. இந்த ஆண்டு ஒரே வித்தியாசம் என்னவென்றால், பி3ழி2 மூலம் ஏற்படும் பாதிப்பு, நாம் வழக்கமாகப் பார்க்கும் நோய் பாதிப்பை விட மிகவும் கடுமையானதாகத் தெரிகிறது, "என்று மூத்த அரசாங்க அதிகாரி கூறினார்.

2021 ஆம் ஆண்டில் ஆகஸ்ட்செப்டம்பரில் அதிக பாதிப்புகள் ஏற்பட்டபோது சுவாச மாதிரிகளில் இது இரண்டாவது பொதுவாகக் கண்டறியப்பட்ட வைரஸ் ஆகும். இது மிகவும் பொதுவானது விக்டோரியா துணை வகை ஆகும். இன்ஃப்ளூயன்ஸா வைரஸ்களில் இரண்டு முக்கிய துணை வகைகள் உள்ளன, அவை வகை கி மற்றும் வகை ஙி ஆகும். இன்ஃப்ளூயன்ஸா கி ஆனது பி1ழி1 மற்றும் பி3ழி2 போன்ற துணை வகைகளை உள்ளடக்கியது, அதே நேரத்தில் விக்டோரியா மற்றும் யமகட்டா எனப்படும் இன்ஃப்ளூயன்ஸா ஙி இன் இரண்டு துணை வகைகள் உள்ளன. பொதுவாக, இன்ஃப்ளூயன்ஸா கி வகை ஙி ஐ விட கடுமையான நோய் மற்றும் இறப்புகளுடன் தொடர்புடையது.

## ஒவ்வொரு ஆண்டும் காய்ச்சல் தடுப்பூசி ஏன் புதுப்பிக்கப்படுகிறது?

புழக்கத்தில் உள்ள வகைகளைப் பொறுத்து வருடத்திற்கு இரண்டு முறை உலக சுகாதார நிறுவனத்தால் வருடாந்திர காய்ச்சல் தடுப்பூசியில் சேர்க்கப்பட வேண்டிய துணை வகைகள் புதுப்பிக்கப்படுகின்றன.

வைரஸ் ஆய்வகங்களின் மிசிவிஸி நெட்வொர்க்,காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் ஏற்ற இறக்கங்களைக் கண்காணிக்க, ஆனால் மிக முக்கியமாக, புழக்கத்தில் உள்ள துணை வகைகளைக் கண்காணிக்க, சென்டினல் தளங்களிலிருந்து சுவாச மாதிரிகளை ஆண்டு முழுவதும் சோதிக்கிறது. இன்ஃப்ளூயன்ஸா வைரஸ்கள் தொடர்ந்து உருவாகி வருவதால் தடுப்பூசியை தொடர்ந்து புதுப்பிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

இது ஒரு "ஆன்டிஜெனிக் சறுக்கல்" மூலம் பிறழ்வுகளைப் பெறுவதற்கு உட்படுத்தப் படலாம், இது உடலின் நோயெதிர்ப்பு மறுமொழியை தவறாக ஏற்படுத்தும் பகுதியை மாற்றும். கோவிட்19 க்கு சமமான ஸ்பைக் புரதம் இருக்கும், இது இப்போது மாறிவிட்டது, எனவே அசல் வைரஸைப் பயன்படுத்தும் தடுப்பூசி பயனற்றது.

இது "ஆன்டிஜெனிக் மாற்றத்திற்கும்" உட்படலாம், அங்கு ஒரு திடீர், பெரிய மாற்றம் வைரஸின் புதிய புரதக் கட்டமைப்பிற்கு வழிவகுக்கும். இதன் விளைவாக, அதே குடும்பத்திலிருந்து ஒரு புதிய வைரஸ் மனிதர்களைத் தாக்குகிறது அல்லது விலங்குகளைத் தாக்கும் வைரஸ் மனிதர்களுக்கு பரவுகிறது. இந்த மாற்றங்கள் 2009 இல் அல்லது 1918 ஆம் ஆண்டு ஸ்பானிஷ் காய்ச்சல் போன்ற தொற்றுநோய்களுக்கு வழிவகுக்கும்.

காய்ச்சல் தடுப்பூசி பொதுவாக நான்கு துணை வகைகளைக் கொண்டுள்ளது, அவை இரண்டு இன்ஃப்ளூயன்ஸா கி (202223 க்கு பி1ழி1 மற்றும் பி3ழி2 பரிந்துரைக்கப்படுகிறது) மற்றும் இரண்டு இன்ஃப்ளூயன்ஸா பி.

## தொற்றுநோய்களைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

ஒரு நோயாளி இருமல் அல்லது தும்மும்போது வெளியிடும் பாதிக்கப்பட்ட நீர்த்துளிகளை உள்ளிழுக்கும் போது காய்ச்சல் பரவுகிறது. இந்த நீர்த்துளிகள் பொருட்களின் மேற்பரப்பிலும் உயிர்வாழும் மற்றும் ஒரு நபர் மேற்பரப்பைத் தொட்டு, பின்னர் அவர்களின் கண்கள், மூக்கு அல்லது வாயைத் தொட்டால் பரவக்கூடும்.

நீங்கள் தும்மும்போது அல்லது இருமும்போது வாய் மற்றும் மூக்கு மூடப்பட்டிருப்பதை உறுதிசெய்து, உங்கள் கைகளை அடிக்கடி கழுவுவதன் மூலம் பரவுவதைத் தடுக்கலாம். உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் போது வீட்டிலேயே இருப்பது மற்றும் நிறைய திரவ உணவுகளை எடுத்துக் கொள்வது நல்லது. தொற்றுநோயைத் தடுக்க நெரிசலான இடங்களில் முகக்கவசங்களைப் பயன்படுத்தலாம்.



# வெளிநாட்டு வக்கீல்களுக்கு இந்தியாவில் என்ன நிபந்தனை?

**நாட்டில் சட்ட நடைமுறையின் நிலப்பரப்பை மாற்றக்கூடிய ஒரு நடவடிக்கை யாக, இந்திய பார் கவுன்சில் (BCI) வெளி நாட்டு வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட நிறுவனங்களை இந்தியாவில் பயிற்சி செய்ய அனுமதித்துள்ளது.**

அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாவிட்டாலும், அவர்கள் வாடிக்கையாளர்களுக்கு வெளிநாட்டு சட்டம் மற்றும் கார்ப்பரேட் பரிவர்த்தனை களில் பணியாற்றலாம்.

**பார் கவுன்சிலின் முடிவு என்ன?**

மார்ச் 13 அன்று, இந்தியாவில் வெளிநாட்டு வழக்கறிஞர்கள் மற்றும் வெளிநாட்டு சட்ட நிறுவனங்களின் பதிவு மற்றும் ஒழுங்குமுறைக்கான விதிகள், 2022ஐ அதிகாரப்பூர்வ அரசிதழில் பார் கவுன்சில் அறிவித்தது.

**இதையும் படியுங்கள்: ஊழல் வழக்கில் கர்நாடக பா.ஜ.க எம்.எல்.ஏவுக்கு வழங்கப்பட்ட முன்ஜாமீன் விவரம் என்ன?**

பார் கவுன்சில் என்பது வழக்கறிஞர்கள் சட்டம், 1961 இன் கீழ் நிறுவப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும், மேலும் இது இந்தியாவில் சட்ட நடைமுறை மற்றும் சட்டக் கல்வியை ஒழுங்குபடுத்துகிறது. ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, இந்தியாவில் வெளிநாட்டு சட்ட நிறுவனங்களை அனு மதிப்பதை பார் கவுன்சில் எதிர்த்து வந்தது.

இப்போது, பார் கவுன்சில் அதன் நடவடிக்கையை, நாட்டில் அன்னிய நேரடி முதலீட்டின் ஓட்டம் குறித்த கவலை களை நிவர்த்தி செய்து, இந்தியாவை சர்வதேச வர்த்தக நடுவர் மையமாக மாற்றும் என்று நியாயப்படுத்தியுள்ளது. இந்தியாவில் தற்போது மிகக் குறைந்த அளவில் செயல்படும் வெளிநாட்டு சட்ட நிறுவனங்களுக்கு இந்த விதிகள் சட்டத் தெளிவைக் கொண்டுவருகின்றன.

பொருள்கள் மற்றும் காரணங்களின் ஒரு நீண்ட அறிக்கையில், "வெளிநாட்டு வழக்கறிஞர்கள் மற்றும் வெளிநாட்டு சட்ட நிறுவனங்கள் வெளிநாட்டு சட்டம் மற்றும் பல்வேறு சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச

நடுவர் விவகாரங்களை இந்தியாவில் பரஸ்பர கொள்கையின் அடிப்படையில் நன்கு வரையறுக்கப்பட்ட, ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் நடைமுறைப்படுத்த இந்த விதிகளை செயல்படுத்த முடிவு செய்துள்ளதாக பார் கவுன்சில் கூறியது."

## புதிய விதிகள் எதை அனுமதிக்கின்றன?

வக்கீல்கள் சட்டத்தின்படி, பார் கவுன்சிலில் பதிவுசெய்யப்பட்ட வழக்கறிஞர்கள் மட்டுமே இந்தியாவில் வழக்கறிஞராக பணியாற்ற தகுதியுடையவர்கள். வழக்காடுபவர் போன்ற மற்ற அனைவரும், நீதிமன்றம், அதிகார அமைப்பு அல்லது விசாரணை நிலுவையில் உள்ள நபரின் அனுமதியுடன் மட்டுமே ஆஜராக முடியும்.



தற்போதைய அறிவிப்பு அடிப்படையில் வெளிநாட்டு வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட நிறுவனங்கள் தங்கள் சொந்த நாடுகளில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான உரிமையிருந்தால், இந்தியாவில் பயிற்சி செய்ய பார் கவுன்சிலில் பதிவு செய்ய அனுமதிக்கிறது. எனினும், அவர்களால் இந்திய சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது.

"வெளிநாட்டு வழக்கறிஞர்கள் அல்லது வெளிநாட்டு சட்ட நிறுவனங்கள் இந்திய நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் அல்லது பிற சட்டப்பூர்வ அல்லது ஒழுங்குமுறை அதிகாரிகளின் முன் ஆஜராக அனுமதிக்கப்பட மாட்டார்கள்."

கூட்டு முயற்சிகள், இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல்கள், அறிவுசார் சொத்து விவகாரங்கள், ஒப்பந்தங்களின் வரைவு மற்றும் பிற தொடர்புடைய விஷயங்கள் போன்ற பரிவர்த்தனை வேலை/ கார்ப்பரேட் வேலைகளை பரஸ்பர அடிப்படையில் பயிற்சி செய்ய அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

அவர்கள் சொத்து பரிமாற்றம், உரிமையியல் விசாரணை அல்லது பிற ஒத்த வேலைகள் தொடர்பான எந்த வேலையிலும் ஈடுபடவோ அல்லது செய்யவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

வெளிநாட்டு சட்ட நிறுவனங்களுடன் பணிபுரியும் இந்திய வழக்கறிஞர்களும் "வழக்கு அல்லாத நடைமுறையில்" மட்டுமே ஈடுபடும் அதே கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுள்ளனர்.

## வெளிநாட்டு சட்ட நிறுவனங்கள் இதுவரை எவ்வாறு இயங்கின?

வெளிநாட்டு சட்ட நிறுவனங்கள் இந்திய சந்தையில் நுழைவது தொடர்பான பிரச்சனை 2009 இல் பம்பாய் உயர் நீதிமன்றத்தில்



ஒரு சவாலுடன் நீதிமன்றத்திற்கு வந்தது. 'வக்கீல்கள் கூட்டமைப்பு எதிர் யூனியன் ஆஃப் இந்தியா' வழக்கில், பம்பாய் உயர்நீதிமன்றம் அடிப்படையில் இந்திய சட்டப் பட்டம் பெற்ற இந்தியர்கள் மட்டுமே இந்தியாவில் வழக்கறிஞர் பயிற்சி செய்ய முடியும் என்று கூறியது.

வழக்கறிஞர்கள் சட்டத்தின் பிரிவு 29 ஐ உயர் நீதிமன்றம் விளக்கியது, இது பார் கவுன்சிலில் பதிவுசெய்யப்பட்ட வக்கீல்கள் மட்டுமே சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என்று கூறுகிறது. 'நடைமுறை' என்பது வழக்கு மற்றும் வழக்கு அல்லாத நடைமுறைகளை உள்ளடக்கும் என்றும் உயர் நீதிமன்றம் கூறியது, எனவே வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் உள்ள தங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனை வழங்கவோ அல்லது நீதிமன்றத்தில் ஆஜராகவோ முடியாது.

2012ல், 'ஏ.கே. பாலாஜி எதிர் யூனியன் ஆஃப் இந்தியா' என்ற வழக்கில், சென்னை உயர் நீதிமன்றத்தில், இதுபோன்ற பிரச்னை வந்தது.

2015 இல், உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பில் வெளிநாட்டு சட்ட நிறுவனங்களின் நடைமுறையை மிகவும் குறுகிய அர்த்தத்தில் அங்கீகரித்தது. வக்கீல்கள் சட்டம் மற்றும் பார் கவுன்சில் விதிகள் வகுத்துள்ள தேவைகள் மற்றும் விதிகளை பூர்த்தி செய்யாத வரை, வெளிநாட்டு நிறுவனங்கள் வழக்கு அல்லது வழக்கு அல்லாத தரப்பில் பயிற்சி செய்ய முடியாது என்று 'ஏ.கே. பாலாஜி எதிர் இந்திய அரசு' வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் கூறியது. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 32 வெளிநாட்டு சட்ட நிறுவனங்கள் இந்த வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டன. ஆனால், சென்னை உயர்நீதிமன்றம் விதிவிலக்கு அளித்தது. "ஃப்ளை இன் அண்ட் ஃப்ளை அவுட்" (அவ்வப்போது வந்து செல்வது) அடிப்படையில் தற்காலிக வருகைகள் அல்லது வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு எந்த தடையும் இருக்காது என்று நீதிமன்றம் கூறியது.

"வெளிநாட்டு சட்ட நிறுவனங்கள் அல்லது வெளிநாட்டு வழக்கறிஞர்கள் இந்தியாவில் உள்ள தங்கள் வாடிக்கையாளர்களுக்கு வெளிநாட்டு சட்டம் அல்லது அவர்களின் சொந்த சட்ட அமைப்பு மற்றும் பல்வேறு சர்வதேச சட்ட சிக்கல்கள் குறித்து சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காக, "ஃப்ளை இன் அண்ட் ஃப்ளை அவுட்" என்ற அடிப்படையில் ஒரு தற்காலிக காலத்திற்கு இந்தியாவிற்கு வருவதற்கு சட்டம் அல்லது விதிகளில் எந்த தடையும் இல்லை. மேலும், மத்தியஸ்தம் மற்றும் சமரசச் சட்டம், 1996 இல் அறிமுகப்படுத்தப்பட்ட சர்வதேச வணிக நடுவர் மன்றத்தின் கருத்து மற்றும்

நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, வெளிநாட்டு வழக்கறிஞர்கள் இந்தியாவிற்கு வந்து சர்வதேச வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தத்தால் எழும் சர்ச்சைகள் தொடர்பாக நடுவர் மன்றம் நடவடிக்கைகளை நடத்துவதைத் தடுக்க முடியாது," என்று உயர் நீதிமன்றம் கூறியது.

2012 வாக்கில், பிசினஸ் பிராசஸ் அவுட்சோர்சிங் (BPOs) பெரிய அளவில் இந்தியாவிற்கு வந்து அமெரிக்காவை தளமாகக் கொண்ட நிறுவனங்களுக்கு பின்தளத்தில் வேலை செய்தது. சட்டத் தொழிலில், இந்த நிறுவனங்கள், சட்ட செயல்முறை அவுட்சோர்சிங் (LPOs), வழக்கறிஞர்களுக்கான ஆதரவு நடவடிக்கைகளை மேற்கொண்டன. அவை நிச்சயமற்ற சட்டக் கட்டமைப்பில் செயல்பட்டன, மேலும் இந்தப் பிரச்சினையில் சட்டத்தைத் தீர்ப்பதற்கு உச்ச நீதிமன்றம் தலையிட வேண்டியிருந்தது.

### உச்ச நீதிமன்றத்தின் முடிவு என்ன?

சென்னை மற்றும் பம்பாய் உயர் நீதிமன்றத் தீர்ப்புகள் இரண்டையும் முறையே பார் கவுன்சில் மற்றும் வக்கீல் கூட்டமைப்பு ஆகியவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தன. 2018 ஆம் ஆண்டில், உச்ச நீதிமன்றம் வெளிநாட்டு சட்ட நிறுவனங்கள் மற்றும் வழக்கறிஞர்களை அனுமதிக்காத உயர் நீதிமன்றத் தீர்ப்புகள் இரண்டையும், "அவ்வப்போது வந்துச் செல்லுங்கள்" என்ற சொற்றொடரை "சாதாரண வருகை நடைமுறைக்கு அல்ல," என்பது போன்ற சில மாற்றங்களுடன் உறுதி செய்தது.

இதன் பொருள் "அவ்வப்போது வந்துச் செல்வது" வழக்கமான வருகைகளைக் குறிக்காது. லிறிளிக்கள் பிரச்சினையில், அவர்களின் தலைவிதியை உச்ச நீதிமன்றம் முடிவு செய்யவில்லை. அவர்கள் முக்கியமாக செயலக ஆதரவு, டிரான்ஸ்கிரிப்ஷன் சேவைகள், சரிபார்த்தல் சேவைகள், பயண மேசை ஆதரவு சேவைகள் போன்றவற்றை நிர்வகிக்கும் ஙிறிளிக்கள் என்று அவர்கள் வாதிட்டனர். இவை தொழில்நுட்ப ரீதியாக வழக்கறிஞர்கள் சட்டம் அல்லது பார் கவுன்சிலின் விதிகளின் வரம்பிற்குள் வரவில்லை.



**புதுச்சேரி விடுதலை போராட்ட வீரர், வழக்கறிஞர் செவாலியர் செல்லா நாயக்கர் அவர்களுக்கு அரசு விழா எடுக்கப்படும் என்று புதுவை முதல்வர் என்.ரங்கசாமி அறிவித்துள்ளார். இது புதுவை மாநில வன்னியர்கள் மற்றும் தமிழ்நாடு வன்னியர்கள் நீண்டநாள் கோரிக்கை ஆகும். இதனை பரிசளித்து ஏற்றுக் கொண்ட முதல்வர் ரங்கசாமி அவர்கள், இன்று அறிவிப்பு வெளியிட்டு, அனைவருக்கும் மகிழ்ச்சியை தந்துள்ளார். இதற்காக அவரை பாராட்டுவதுடன் முதல்வருக்கு நன்றியும், பாராட்டுதலையும் அனைத்து வன்னியர்களும், தெரிவித்துக் கொள்கிறார்கள்.**

# வெளிநாடுகளில் உள்ள பழங்கால கலைப் பொருட்கள்!

## இந்திய, சர்வதேச சட்டங்கள் கூறுவது என்ன?

**சுதந்திரத்திற்கு முன், "உரிமம் இல்லாமல் எந்தப் பழங்கால கலைப் பொருட்களையும் ஏற்றுமதி செய்ய முடியாது" என்பதை உறுதி செய்வதற்காக ஏப்ரல் 1947 ல் தொல் பொருட்கள் (ஏற்றுமதி கட்டுப்பாடு) சட்டம் நிறைவேற்றப்பட்டது.**

*விசாரணையில், நியூயார்க்கில் உள்ள மெட்ரோபொலிட்டன் மியூசியம் ஆஃப் ஆர்ட் பட்டியலில், தமிழகத்தில் பழங்கால பொருட்களை கடத்தியதற்காக 10 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்ட சுபாஷ் கபூர் உடன் தொடர்புடைய குறைந்தபட்சம் 77 பொருட்கள் உள்ளன.*

### பழங்கால கலைப் பொருட்கள் என்றால் என்ன?

*ஏப்ரல் 1, 1976ல் நடைமுறைப்படுத்தப் பட்ட பழங்கால கலைப் பொருட்கள் மற்றும் கலைப் பொக்கிஷங்கள் சட்டம் 1972, பழங்கால கலைப் பொருட்கள் என்பது எந்தவொரு நாணயம், சிற்பம், ஓவியம், கல்வெட்டு அல்லது கலை அல்லது கைவினைப் பொருட்கள் என வரையறுக்கப்பட்டது; ஒரு கட்டிடம் அல்லது குகையில் இருந்து பிரிக்கப்பட்ட எந்தவொரு பொருள், பொருள் அல்லது பொருள்; கடந்த காலங்களில் விஞ்ஞானம், கலை, கைவினைப்பொருட்கள், இலக்கியம், மதம், பழக்கவழக்கங்கள், ஒழுக்கம் அல்லது அரசியல் ஆகியவற்றை விளக்கும் எந்தவொரு கட்டுரை, பொருள் அல்லது கலைப் பொருள்; எந்தவொரு பொருல், நூறு ஆண்டுகளுக்குக் குறையாத கலைப்பொருள் அல்லது வரலாறு தொடர்பான பொருள்க" என்று வரையறுக்கப்பட்டுள்ளது.*

*அறிவியல், வரலாறு, இலக்கிய அல்லது அழகியல் மதிப்புமிக்க கையெழுத்துப் பிரதி, ஆவணங்கள் அல்லது பிற ஆவணத்திற்கு, இந்த கால அளவு "எழுபத்தைந்து ஆண்டு களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.*

### சர்வதேச மாநாடுகள் கூறுவது என்ன?

*யுனெஸ்கோ 1970ல் பழங்கால கலைப் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வதை தடை செய்வதற்கான மாநாடு, கலாசாரச் சொத்து உரிமையின் சட்டவிரோத இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் பரிமாற்றத்தைத் தடுப்பது, கலாச்சார சொத்து என்பது தொல்லியல்,*



வரலாற்றுக்கு முந்தைய, வரலாறு, இலக்கியம், கலை அல்லது அறிவியலுக்கு முக்கியத்துவம் உள்ள நாடுகளால் குறிக்கப்பட்ட சொத்து என வரையறுக்கப்படுகிறது.

மேலும், அந்த பிரகடனம் கூறுகிறது: "கலாச்சார சொத்துக்களின் சட்டவிரோத இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் உரிமையை மாற்றுவது, அத்தகைய சொத்துக்களின் பிறப்பிடமான நாடுகளின் கலாச்சார பாரம்பரியத்தை ஏழ்மைப்படுத்துவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று. மேலும், சர்வதேச ஒத்துழைப்பு என்பது ஒவ்வொரு நாட்டின் கலாச்சாரச் சொத்துக்களைப் பாது காப்பதற்கான மிகச் சிறந்த வழிமுறைகளில் ஒன்று." என்று கூறுகிறது.

அதன் பிறகு, 2000ம் ஆண்டில், ஐ.நா.வின் பொதுச் சபை, 2015 மற்றும் 2016ம் ஆண்டுகளில் ஐ.நா. யுனெஸ்கோ மாநாட்டிற்கு கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்குப் பிறகு, கலாச்சார பொருட்கள் மற்றும் தொடர்புடைய குற்றங்களின் சட்டவிரோத சர்வதேச போக்குவரத்து துரதிர்ஷ்டவசமாக பெரிய



அளவில் அதிகரித்துள்ளது என்று 2019ல் ஒரு இண்டர்போல் அறிக்கை கூறியது.

## இந்திய சட்டங்கள் கூறுவது என்ன?

இந்தியாவில், ஒன்றிய அரசின் பட்டியலில் உள்ள பொருட்கள்67, மாநிலப் பட்டியலில் உள்ள பொருட்கள்12, அரசியலமைப்பின் ஒருங்கிணைந்த பட்டியலில் உள்ள பொருட்கள்40 ஆகியவை நாட்டின் பாரம்பரி யத்தைப் பற்றியது.

சுதந்திரத்திற்கு முன், உரிமம் இல்லாமல் எந்தப் பழங்கால கலைப்பொருள்களையும் ஏற்றுமதி செய்ய முடியாது என்பதை உறுதி செய்வதற்காக ஏப்ரல் 1947ல் கலைப் பொருட்கள் (ஏற்றுமதி கட்டுப்பாடு) சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1958ல், பண்டைய நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்கள் மற்றும் தொல்லியல் எச்சங்கள் சட்டம் இயற்றப்பட்டது. பின்னர் 1971ம் ஆண்டில் சம்பாவில் இருந்து ஒரு வெண்கல சிலை மற்றும் பிற இடங்களில் இருந்து சில முக்கியமான மணற்கல் சிலைகள் திருடப் பட்டதால் நாடாளுமன்றத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

இது, யுனெஸ்கோ மாநாட்டுடன், ஏப்ரல் 1, 1976 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட பழங்கால கலைப் பொருட்கள் மற்றும் கலைப் பொக்கிஷங்கள் சட்டம், 1972 (ஏ.ஏ.டி.ஏ) (AATA) அரசாங்கம் இயற்றுவதற்கு வழிவகுத்தது.

ஏ.ஏ.டி.ஏ கூறுகிறது: "எந்தவொரு நபரும், மத்திய அரசு அல்லது மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு அதிகாரமும் அல்லது நிறுவனமும் தவிர, எந்தவொரு பழங்கால கலைப் பொருள்கள் அல்லது கலைப் பொக்கிஷத்தையும் ஏற்றுமதி செய்வது சட்டப்பூர்வமானது அல்ல. உரிமத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டால் தவிர, எந்தவொரு நபரும், தாமாகவோ அல்லது அவர் சார்பாக வேறு எந்த நபராலோ, எந்தவொரு பழங்கால கலைப்பொருட்களையும் விற்பனை செய்தல் அல்லது விற்பனை செய்யும் தொழிலை மேற்கொள்ளக்கூடாது." என்று கூறுகிறது.

இந்த உரிமத்தை இந்திய தொல்லியல் துறை (ASI) வழங்குகிறது. ஏ.ஏ.டி.ஏ நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு, பழங்காலப் பொருட்கள் மற்றும் கலைப் பொருள்களின் வர்த்தகர்களை ஜூன் 5, 1976க்குள் தங்கள் உடைமைகள் மற்றும் தனிப்பட்ட உரிமை யாளர்கள் ஜூலை 5, 1976க்குள் அறிவிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டது.

## பழங்கால கலைப் பொருட்களுக்கு ஆதாரம் என்ன?

ஆதாரம் என்பது பொருள் அதன் தயாரிப் பாளரின் உடைமையிலிருந்து தற்போதைய உரிமையாளரால் கையகப்படுத்தப்பட்ட நேரம் வரை அனைத்து உரிமையாளர்களின் பட்டியலையும் உள்ளடக்கியது.

## உரிமை எப்படி நிரூபிக்கப்படுகிறது?

யுனெஸ்கோ 1970ம் ஆண்டு பிரகடனம், உரிமை கோருபவர் தனது செலவில்,

ஆவணங்கள் மற்றும் பிற ஆதாரங்களை மீட்டெடுப்பதற்கும் திருப்புவதற்கும் அதற்கான உரிமை கோரலை நிறுவுவதற்குத் தேவையானவற்றை வழங்க வேண்டும்." உரிமையை நிரூபிக்க முதல் விஷயம் காவல்துறையில் பதிவு செய்யப்பட்ட புகார் (எஃப்ஐஆர்). இந்தியாவில், காணாமல் போன பழங்கால கலைப் பொருட்களால் ஏற்படும் பிரச்சனை என்னவென்றால், பல சந்தர்ப்பங்களில், எஃப்.ஐ.ஆர் இல்லை. ஆனால், ஆராய்ச்சிக் கட்டுரைகள் போன்ற வற்றில் புகழ்பெற்ற அறிஞர்கள் குறிப்பிடும் விவரங்கள் போன்ற மற்ற சான்று களும் இதில் பயனுள்ளதாக இருக்கின்றன.

## போலியான பழங்கால கலைப் பொருட்களை எப்படி சரிபார்ப்பது?

ஏ.ஏ.டி.ஏ பிரிவு 14(3)ன் கீழ், "எந்தவொரு பழங்கால கலைப் பொருட்களை வைத் திருக்கும், கட்டுப்படுத்தும் அல்லது வைத்திருக்கும் ஒவ்வொரு நபரும் அத்தகைய பழங்கால கலைப் பொருளை பதிவு செய்யும் அதிகாரியிடம் பதிவுசெய்து, அத்தகைய பதிவின் அடையாளமாக ஒரு சான்றிதழைப் பெற வேண்டும்."

இதுவரை, நினைவுச்சின்னங்கள் மற்றும் பழங்கால கலைப் பொருட்கள் தொடர்பாக தேசியமிஷன்,மார்ச் 2007ல்தொடங்கப்பட்டது. இது ஆவணப்படுத்திய 16.70 லட்சத்தில் 3.52 லட்சம் பழங்காலப் பொருட்களைப் பதிவு செய்துள்ளது. இது சட்டவிரோத நடவடிக்கைகளை திறமையாகத் தடுக்க உதவுகிறது. ஜூலை 2022ல் நாடாளுமன்றத்தில் கலாச்சார அமைச்சகத்தின் அறிக்கை யின்படி, நாட்டில் உள்ள மொத்த பழங்கால கலைப்பொருட்களின் எண்ணிக்கையில் இது மிகச் சிறிய பகுதி. இது சுமார் 58 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## பழங்கால கலைப் பொருட்களை இந்தியா திரும்பக் கொண்டு வர முடியுமா?

இதில் கவனிக்க வேண்டிய மூன்று வகைகள் உள்ளன: சுதந்திரத்திற்கு முன் இந்தியாவில் இருந்து எடுக்கப்பட்ட பழங்கால கலைப் பொருட்கள்; சுதந்திரம் பெற்றதில் இருந்து மார்ச் 1976 வரை, அதாவது ஏ.ஏ.டி.ஏ செயல்படுத்தப்படுவதற்கு முன்பு எடுக்கப்பட்டவை; ஏப்ரல் 1976 முதல் நாட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பழங்கால கலைப் பொருட்கள் அடங்கும்.

முதல் இரண்டு வகைகளில் உள்ள



பொருட்களுக்கு, கோரிக்கைகள் இருதரப்பு அல்லது சர்வதேச அரங்கில் எழுப்பப்பட வேண்டும். உதாரணமாக, மகாராஷ்டிர அரசாங்கம் நவம்பர் 10, 2022ல் லண்டனில் இருந்து சத்ரபதி சிவாஜி மகாராஜின் வாளை மீண்டும் கொண்டுவருவதற்கான பணிகளை அறிவித்தது.

இந்த வாள் 1875-76ல் நான்காம் சிவாஜியால் வேல்ஸ் இளவரசர் எட்வர்டுக்கு (பின்னர் வந்த மன்னர் எட்வர்ட் VII) வழங்கப்பட்டது. தார் (மத்தியப் பிரதேசம்), வக்தேவி முதல் கோஹினூர் வைரம், அமராவதி மார்பிள்கள், சுல்தாகஞ்ச் புத்தர், ராணி லக்ஷ்மிபாய், திப்பு சுல்தான் தொடர்பான பழங்கால கலைப் பொருட்கள் வரை பல கலைப் பொருட்கள் தற்போது வெளிநாட்டில் உள்ளன.

இரண்டாவது மற்றும் மூன்றாவது வகைகளில் உள்ள பழங்கால கலைப் பொருட்களை, உரிமைச் சான்றுடன் இருதரப்பு பிரச்சினையை எழுப்பி யுனெஸ்கோ மாநாட்டின் உதவியுடன் எளிதாகப் பெறலாம். சுபாஷ் கபூரின் தண்டனை, கடத்தப்பட்ட பழங்கால கலைப் பொருட்களை இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்பை அளித்துள்ளது.


DNC
Chits Pvt. Ltd.
Trust is our Tradition. Since 1965.
நம்பிக்கையே எங்கள் பாரம்பரியம்
50 Years of Trust
சென்னை தி.நகரில்
புதிய தலைமை அலுவலகம்
DNC சிட்ஸ் வழங்கும் சீட்டு குரூப்புகள் உங்கள் எதிர்கால கட்டாய பணத்தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் உங்கள் வசதிக்கேற்ற சீட்டுத் தொகை மற்றும் கால அளவு கொண்டதாக உள்ளது. இதில் நீங்கள் உங்கள் விருப்பத்திற்கேற்றார் போல ரூ.1.00,000 முதல் ரூ.50,00,000 வரையிலான சீட்டில் சேர்ந்து உங்கள் எதிர்கால பணத்தேவையை பூர்த்தி செய்யலாம்
DNC
14/49, நரசிம்மன் ரோடு, வடக்கு போக் ரோடு,
தி.நகர், சென்னை-600 017
போன் : 044-4241 4444
தமிழகமெங்கும்
30
கிளைகளுடன்
" சிட்டுன்னு DNC
சட்டுனு பணம் வரும் "
பதிவு அலுவலகம், எண் 11, நாச்சியப்ப கவுண்டர் தெரு, தருமபுரி - 636701. போன் : 04342 262040
எமது கிளைகள் : கே.கே.நகர் 044 45022040 | கிருஷ்ணகிரி 04343-233040 | சேலம் 0427-2446040 | தஞ்சாவூர் 04362-2366040
நாமக்கல் 04286-275040 | வேலூர் 04162-221040 | ஆத்தூர் 04282-251020 | ஈரோடு 04242-262040 | எடப்பாடி 04283-222050
பேரூர் 044-48614060 | திருப்பத்தூர் 04179-223040 | கரூர் 04324-241040 | கோவை 0422-4983422 | திண்டுக்கல் 0451-2422040
தாம்பரம் 044-48574030 | கடலூர் 04142-222020 | பாலக்கோடு 04348-222040 | பொம்மிடி 04346-245060 | ஓமலூர் 04290-222040
ஓசூர் 04344-223040 | அம்பத்தூர் 044-48502040 | புரசைவாக்கம் 044-4852230 | மடிப்பாக்கம் 044-48684050 | காவேரிபட்டினம்
04343-252240 | போச்சம்பள்ளி 04341-252040 | ராசிபுரம் 04287-222050 | திருச்செங்கோடு 04288-252040 | செங்கல்பட்டு 04427-423030
2
www.dncchits.com

# 2023 ஆஸ்கார் விருது வென்ற 'நாட்டு நாட்டு' பாடல்!

**தெலுங்கு சினிமாவின் முன்னணி இயக்குனராக ராஜமௌலி இயக்கத்தில் வெளியான ஆர்ஆர்ஆர் படத்தில் இடம்பெற்ற நாட்டு நாட்டு பாடல் நடப்பு ஆண்டில் ஜனவரி மாதத்தில் கோல்டன் குளோப் விருதை வென்ற நிலையில், தற்போது சினிமா துறையின் உயரிய விருதான ஆஸ்கார் விருதை வென்றுள்ளது.**

2009 ஆம் ஆண்டு வெளியான பிரிட்டிஷ் இயக்குனர் டேனி பாயிலின் 'ஸ்லம்டாக் மில்லியனர்' திரைப்படத்தின் 'ஜெய் ஹோ' படத்திற்காக இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் மற்றும் பாடலாசிரியர் குல்சார் ஆகியோருக்கு ஆஸ்கார் விருது பெற்ற நிலையில், தற்போது இந்தியா சார்பில் 2வது பாடலுக்கு ஆஸ்கார் விருது வென்றுள்ளது. ராகுல் சிப்லிகஞ்ச் மற்றும் கால பைரவா பாடிய பாடலுக்கான விருதை இசையமைப்பாளர் எம்.எம்.கீரவாணி மற்றும் பாடலாசிரியர் சந்திரபோஸ் பெற்றனர்.

தி கார்பெண்டர்ஸின் 'டாப் ஆஃப் தி வேர்ல்ட்' பாடல் வரிகளை மாற்றிய கீரவாணி,, "என் மனதில் ஒரே ஒரு ஆசை இருந்தது, ராஜமௌலி மற்றும் என் குடும்பத்தினரின் ஆசை, ஆர் ஆர் ஆர் ('ஸிஸிஸி) வெற்றி பெற வேண்டும், ஒவ்வொரு இந்தியனுக்கும் பெருமை மற்றும் என்னை உலகின் உச்சியில் வைக்க வேண்டும் என்று நினைத்ததாக கூறியுள்ளார்

சிப்லிகஞ்ச் மற்றும் பைரவா படத்தில் இருந்து நடிகர்கள் ராம் சரண் மற்றும் ஜூனியர் என்டிஆர் ஆகியோரின் நடன அசைவுகளை மீண்டும் உருவாக்கிய நடனக் கலைஞர்களுடன் பாடலைப் பாடினர். விழாவில் விருதை வழங்கிய நடிகை தீபிகா படுகோன், "தடுக்க முடியாத கேட்ச் கோரஸ், துடிப்பான நடனம் மற்றும் கில்லாடிகளின் ஆட்டம். பாடலில் இடம்பெற்ற நடன அசைவுகள் இந்த அடுத்த பாடலை உலகளவில் பரபரப்பாக்கியுள்ளது" என்று கூறியுள்ளார்.

'பிளாக் பாந்தர்: வகாண்டா ஃபாரெவர்' இலிருந்து ரிஹானாவின் கீதம்' லிஃப்ட் மீ அப்', 'டாப் கன்: மேவரிக்'லிருந்து லேடி காகாவின் 'ஹோல்ட் மை ஹேண்ட்' மற்றும் அதிகம் பரிந்துரைக்கப்பட்ட படத்திலிருந்து 'திஸ் இஸ் லைஃப்' ஆகியவை இந்த பிரிவில் பரிந்துரைக்கப்பட்ட மற்ற பாடல்களாகும். ஜப்பானிய அமெரிக்க பாடகர்பாடலாசிரியர் மிட்ஸ்கி மற்றும் டாக்கிங் ஹெட்ஸ் டேவிட் பைர்ன் ஆகியோரின் இரவு, 'எவ்ரிதிங் எவ்வேர் ஆல் அட் ஒன்ஸ்' என்ற பாடலும் பட்டியலில் இருந்தது.

பான்இந்திய திரைப்பட ட்ரெண்டைத் உருவாக்கிய பாகுபலி படங்களை இயக்கிய எஸ்எஸ் ராஜமௌலி ஆர் ஆர் ஆர் படத்தை இயக்கியிருந்தார். 1920 இல் வாழ்ந்த இந்தியாவின் இரண்டு முக்கிய புரட்சியாளர்களான அல்லூரி சீதாராம ராஜு (ராம் சரண்) மற்றும் கொமரம் பீம் (ஜூனியர் என்டிஆர்) ஆகியோரின் கற்பனையான கதையைச் சொல்கிறது. இருவரும் உண்மையில் சந்திக்கவில்லை என்றாலும், அவர்களின் நட்பை மையமாக வைத்து, சுதந்திரப் போராட்டத்தின் போது அவர்கள் எவ்வாறு முரண்பாடுகளை சமாளித்தார்கள் என்பதை மையமாகக் கொண்டு திரைக்கதை அமைக்கப்பட்டிருந்தது.

படத்தில் ஒரு முக்கிய கட்டத்தில் 'நாட்டு நாட்டு' பாடல் வருகிறது: இரண்டு ஹீரோக்களும் பிரிட்டிஷ் மன்னர்களால் நடத்தப்பட்ட ஒரு விருந்தில் இருக்கிறார்கள், மேலும் 'உண்மையான நடனம்' என்ன என்பதை ஆங்கிலேயர்களுக்குக் காட்ட முடிவு செய்து, இந்தியர்கள் என்ற அவர்களின்





பெருமையை வெளிப்படுத்தும் வகையில், இந்த பாடல் அமைந்திருக்கும். மேலும் விருந்தில் சில வெள்ளையர்கள் ஆர்வத்துடன் பாடலை எடுத்துக்கொள்வதால், ஆங்கிலேயர்கள் தங்கள் காலனித்துவத்தில் அமல்படுத்திய மேன்மை உணர்வுக்கு எதிராக அலை எவ்வாறு மாறுகிறது என்பதற்கான அறிகுறி படத்தில் காட்டப்பட்டது..

### 'ஆர்ஆர்ஆர்' படம் எதைப் பற்றியது?

சீதாராம ராஜு (பிரிட்டிஷ் ராஜ் ஜியத்திற்கு எதிராகப் போராடியவர்) மற்றும் பீம் (ஹைதராபாத் நிஜாமுக்கு எதிராகப் போராடியவர்) ஆகியோரின் வாழ்க்கையைப் பற்றி படித்தபோது தனக்கு இநத எண்ணம் தோன்றியதாக 'ஆர் ஆர் ஆர்' படத்தின் இயக்குனர் ராஜமௌலி கூறியுள்ளார். "அல்லூரி சீதாராம ராஜு மற்றும் கொமரம் பீம் ஆகியோரைப் பற்றி நான் படித்தபோது, அவர்களின் கதை ஒரே மாதிரியானது என்பதை அறிந்து உற்சாகமாக இருந்தது. அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்ததே இல்லை.

அவர்கள் சந்தித்திருந்தால் என்ன? அவர்கள் ஒருவருக் கொருவர் ஈர்க்கப்பட்டிருந்தால் என்ன செய்வது? அதுதான் 'ஆர் ஆர் ஆர்'. இது முற்றிலும் கற்பனையானது. படம் மிகப் பெரிய அளவில் ஏற்றப்பட்டுள்ளது. அதற்காக ஆடைகள், அவர்களின் பேச்சுவழக்கு, அவர்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றை அறிய நிறைய ஆராய்ச்சிகள் செய்ய வேண்டியிருந்தது. அதனால்தான் இதை ஒன்றிணைக்க எங்களுக்கு இவ்வளவு நேரம் பிடித்தது என்று கூறியிருந்தார்.

இரண்டு தெலுங்கு புரட்சியாளர்களும் பழங்குடி மக்களை வழிநடத்தினர், ஆனால் பீம் ஒரு பழங்குடி மனிதர், கோண்ட் சமூகத்தைச் சேர்ந்தவர், ராஜு அப்படி இல்லை. இருவரும் இளமையில் இறந்தனர், ஆனால் காலனித்துவத்திற்கு எதிரான போராட்டத்திற்கு தங்களது பங்களிப்பை கொடுத்தனர். நடிகர் ஜூனியர் என்டிஆர், "தெலுங்கு ஹீரோக்களான அல்லூரி சீதாராம ராஜு மற்றும் கொமரம் பீம் பற்றி இந்தியா அறியும் தாக்கம்" "இப்போது, ஒரு கட்டத்தில் அவர்கள் ஒருவரையொருவர் சந்திப்பதற்கான சாத்தியக்கூறுகளை நாங்கள் கற்பனை செய்கிறோம் என்று கூறியுள்ளார்

அர்ஜென்டினாவின் மார்க்சிஸ்ட் புரட்சித் தலைவர் சே குவேராவின் வாழ்க்கை வரலாற்றுப் படமான 'தி மோட்டார்சைக்கிள் டைரிஸ்' (2004) இப்படத்தின் ஸ்கிரிப்ட் அவர் பிரபலமடைவதற்கு முந்தைய காலகட்டத்தை மையமாக வைத்து எடுக்கப்பட்டது "இந்த

யோசனை என்னுடையது. The Motorcycle Diaries பார்த்தேன். இறுதியில், படத்தில் வரும் கதாபாத்திரம் யாரோ ஒரு பையன் அல்ல, சே குவேரா என்று அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். அந்த எண்ணம் எனக்குள் ஒட்டிக்கொண்டது. முழுக்கதையையும் விவரித்து இறுதியில் இருவரும் எதிர்காலத்தில் யார் என்பதை வெளிப்படுத்தினால் என்னவாகும் என்ற எண்ணமும் என்னைக் கவர்ந்தது. படத்தின் மூலம் அந்த எண்ணம் விதைக்கப்பட்டது" என்று ராஜமௌலி கூறியுள்ளார்

## 'நாட்டு நாட்டு' சிறப்பு என்ன?

'நாட்டு நாட்டு' என்பது 2022 ஆம் ஆண்டை உலகளவில் பிரபலமான உரு பாடல். உலகெங்கிலும் உள்ள மக்கள் இந்த பாடலின் நடனம் மற்றும் ஆற்றலைப் பின்பற்ற முயற்சித்ததால், அதன் நடன அமைப்பு பல்வேறு சமூக ஊடக தளங்களில் வைரலானது. குறிப்பாக, டிக்டோக்கில் அதன் வைரலானது அமெரிக்க சந்தையில் படத்தின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணமாக கருதப்படுகிறது.

என் கனவில் கூட இந்தப் பாடலுக்கு இந்த மாதிரியான வரவேற்பு இருக்கும் என்று நான் யூகிக்கவில்லை என்று அதன் இசையமைப்பாளர் கீரவாணி கூறியிருந்தார். ஆனால் ஒரு முரண்பாடான அறிக்கையாக, இது ஒரு கனவு நனவாகும்." ராஜமௌலியின் நடனக் காட்சிக்காக மட்டும் 20 வித்தியாசமான பாடல்களை அவர் எழுதினார். கீரவாணி மேலும் கூறுகையில், "நாட்டு நாடு பாடல் அனைத்தையும் மறக்கச் செய்ய வேண்டும் □ படத்தைப் பார்க்கும் பார்வையாளர் மட்டுமல்ல, கதையின் கதாபாத்திரங்களும் தங்களைச் சுற்றி நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் மறந்துவிட்டு, முழு கவனத்தையும் செலுத்த வேண்டும். பாடலின் மீது கவனம். மேலும் பாடலின் இறுதிப் பகுதியான கோடா, மிகவும் சகிப்புத்தன்மையைக் கொண்டுள்ளது, நீங்கள் அதை ஒரு பாடல் என்று அழைக்க முடியாதுஇது ஒரு அதிரடி காட்சி என்று கூறியுள்ளார்.

மேலும் கோல்டன் குளோப் விருதை வென்ற பிறகு, பாடலின் பாடலாசிரியர் சந்திரபோஸ் கூறுகையில்,"இது எனக்கு ஒரு பெரிய விஷயம்ஞ் நான் 90% பாடலை அரை நாளில் எழுதினேன், மீதமுள்ள 10% 1.7 ஆண்டுகள் எடுத்தது. எனது முயற்சி, கடின உழைப்பு மற்றும் பொறுமைக்கு பலன் கிடைத்துள்ளது" என கூறியிருந்தார்.

முன்னதாக, கீரவாணி இந்த பாடலை நடனக் கலைஞர்களின் சகிப்புத்தன்மையை" சோதிக்கும் ஒன்று என்று விவரித்திருந்தார். ஜூனியர் என்.டி.ஆர் இதேபோல் ராஜமௌலி நடனக் கலைஞர்களை எப்படி பல நாட்கள் 'சித்திரவதை' செய்தார் என்று கேலி செய்தார். "நாங்கள் அந்த பாடலை 12 நாட்கள் படமாக்கினோம், இந்த மனிதன் எங்களை 88 முதல் சித்திரவதை செய்வார், நாங்கள் 11:30 மணிக்கு தூங்குவோம், 5:30 மணிக்கு எழுந்திருப்போம். 7 நாட்கள் ஒத்திகைக்குப் பிறகு இது நடந்தது. அவர் சின்க்ரோனைசேஷனில் மிகவும் நரகமாக இருந்தார், கால்களும் கைகளும் ஒன்றாகச் சென்றால் மானிட்டரில் பார்த்துக் கொண்டிருந்தார்.

## பாடலின் பின்னணியில் இருப்பவர்கள் யார்?

பாடலுக்குகீரவாணிஇசையமைத்துள்ளார். இவர் இயக்குனர் ராஜமௌலியின் உறவினர், பாகுபலி தொடருக்கான பாடல்களையும் இயற்றியுள்ளார்.கீரவாணிஇந்தியமொழிகளில் பாடல்களை இயற்றியுள்ளார் மற்றும் இதற்கு முன்பு தேசிய விருதையும் வென்றுள்ளார். அவரது இந்தி இசையமைப்பில் 'தும் மைலே தில் கிலே' ('கிரிமினல்', 1995) மற்றும் மகேஷ் பட்டின் 'சாக்ம்' (1998) இல் 'கலி மே ஆஜ் சந்த் நிக்லா' ஆகிய படங்களுக்காக தேசிய விருதை வென்றுள்ளார். தமிழ் மற்றும் மலையாளம் பேசுபவர்கள் அவரை மார்கத மணி என்று அறிந்திருக்கலாம்,

சந்திரபோஸ் என்று அழைக்கப்படும் கனுகுன்ட்லா சுபாஷ் சந்திரபோஸ், தெலுங்கு திரையுலகில் முக்கியமாக பணியாற்றும் ஒரு பாடலாசிரியர் ஆவார். 1995 ஆம் ஆண்டு தெலுங்கு திரைப்படமான 'தாஜ்மஹால்' மூலம் பாடலாசிரியராக அறிமுகமான அவர், அதன்பின்னர் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களுக்கு வரிகள் எழுதியுள்ளார். இதற்கு முன், அவர் பாடுவதில் தனது முயற்சியை மேற்கொண்டார், ஆனால் பின்னர் பாடல் எழுதுவதற்கு மாறினார்.

அவர் தனது பாடல்களில் எளிமையான



